# இதுதான் சொர்க்கம்!

1

ஏர்கண்டிஷனரின் ஜில்லிப்பில் ஊறியிருந்த - அந்த ஸில்க் எம்போரியத்தின் கண்ணாடிச் சுவர்களுக்கு மத்தியில் இருந்தார்கள் வித்யாவும் உதயகுமாரும்.

''எது பிடிக்குது?'' - உதய்குமார் கேட்டான்.

''ஒண்ணுமே பிடிபடலை... எந்தப் புடவையைப் பார்த்தாலும் மூஞ்சியில் அறைகிற மாதிரியான நிறம்..''

கடைச் சிப்பந்தி - ஐவரி நிறத்தில் ஒரு பட்டுப் புடவையை எடுத்து விரித்தான். ''இதைப் பாருங்கம்மா..''

வித்யாவின் முகம் மலர்ந்தது.

''ம்... இது பரவாயில்லை..! என்னங்க.. இந்தக் கலர் பிடிச்சிருக்கா பாருங்க..''

வாங்கிப் பார்த்த உதயகுமார் உதட்டைப் பிதுக்கினான்.

''ஏன் பிடிக்கலையா...?''

''புடவை நல்லாத்தான் இருக்கு... ஆனா உன்னோட எலுமிச்சம் பழ நிறத்துக்கு... முன்னாடி இந்த சேலையோட நிறம் அடிபட்டு போயிடும்...''



''சரி...அந்த குங்கும நிற புடவை...''

''அது நல்லாத்தான் இருக்கு... ஆனா.. விலை?''

''நாலாயிரம் ரூபாய் போட்டிருக்கு..''

''இன்னிக்கு நம்ம முதல் வெட்டிங் அனிவர்சரி.. நான் என்னோட அழகான மனைவிக்கு எடுத்துத் தரப் போற புடவை இன்னும் க்ராண்டா இருக்கணும்னு நினைக்கிறேன்..''

பிரமிப்பில் மூச்சடைத்துப் போன - வித்யா உதயகுமாரின் சினிமாஸ்கோப் அகல தோள்களை ஆர்வமாய் பற்றிக் கொண்டு - கடைச் சிப்பந்திக்குத் தெரியாமல் கிசுகிசுத்தாள்.

''இப்பத்தானே.. தீபாவளிக்காக ஏழாயிரத்தில் ஒரு புடவை எடுத்துத் தந்தீங்க..?''

''தீபாவளியும் நம்ம வெட்டிங் டே அனிவர்ஸரியும் ஒண்ணாயிடுமா...?'' என்றவன் கடைச் சிப்பந்தியிடம் திரும்பினான்.

''எட்டாயிரத்திலிருந்து பத்தாயிரத்துக்குள்ளே... இருக்கிற... சேலைகளை மாத்திரம் எடுத்துப் போடுங்க...''

அவன் சந்தோஷமாகப் பல்லிளித்து - கண்ணாடி அலமாரிகளின் ஸ்லைடர்களைத் தள்ளி - புடவைகளை எடுத்துக் குவித்தான்.

சுத்தமாய் அரை மணி நேரம்.

மெலிதான ஊதா நிறத்தில் - ஒன்பதாயிரத்து சொச்ச ரூபாய்க்கு ஒரு பட்டுப் புடவையை அள்ளிக் கொண்டு - கௌண்டரில் பணத்தை 'பே' பண்ணிவிட்டு வெளியே வந்தார்கள். மங்கலாய் வெளிச்சமிழந்த காரிடாரில் நடந்தபடி கார் பார்க்கிங்கை நோக்கிப் போனார்கள்.

''என்னங்க?''

''ம்...''

''நாம இறந்த பிறகு சொர்க்கத்துக்கும்... நரகத்திற்கும் போறோம்ங்கிறதுல உங்களுக்கு நம்பிக்கை இருக்கா...?''

''ம்... இருக்கு.''

''எனக்கு இல்லீங்க?''

''ஏன்...?''

''ஒவ்வொருத்தரும் அவங்கவங்க உயிரோடு இருக்கும் போதே இந்த பூமியில் சொர்க்கத்தையோ, நரகத்தையோ அனுபவிச்சுட றாங்க...''

''ஆமா.. எதுக்காக அந்த ஆராய்ச்சி...?''

''உங்களை நான் கணவனா அடைஞ்சது மூலமா சொர்க்கத்தை அனுபவிச்சுட்டு வர்றேன்...''

''ஒன்பதாயிரம் ரூபாய்ல பட்டுச் சேலை எடுத்துக் குடுத்ததுக்கே இவ்வளவு பெரிய ஐஸை என் தலையில் வைக்க வேண்டாம்...''

''இது ஐஸ் இல்லங்க... ஆத்ம பூர்வமான உணர்ச்சி. என் ஃப்ரெண்ட்ஸ்க்கு அமைஞ்ச திருமண வாழ்க்கையில் பத்துக்கு எட்டு பேர் திருப்தியில்லாமே இருக்காங்க. திருப்தியின்மைக்குக் காரணம், பணமோ படுக்கையோ இல்லை... சின்னச் சின்ன விஷயங்களில் கூட கணவனோட டாமினேஷன்களை அவர்களாலே தாங்கிக்க முடியலை. கல்யாணத்துக்கு முந்தி இருந்த சந்தோஷம்... கல்யாணத்துக்கு பின்னாடி அடிபட்டு போயிட்டதா... சொல்லியிருக்காங்க. அவங்களோட புலம்பல்களைக் கேட்டு... ஒவ்வொரு சமயம் எனக்குக் கல்யாணமே வேண்டாம்ன்னு கூட நினைச்சிருக்கேன்... அந்த நினைப்பு எவ்வளவு பெரிய தப்புன்னு இப்போ என் மனசுக்குப் படுது. என்னோட உணர்ச்சிகளுக்கு மதிப்புக் குடுத்து என்னோட சந்தோஷத்தைப் பெரிசா நினைக்கிறீங்க... நீங்க என் பக்கத்துல இருக்கிற வரைக்கும் ஒவ்வொரு விநாடியும் எனக்கு சொர்க்கம்தான்...''



''இதோ பார் வித்யா... ஒரு ஆண் சந்தோஷமா இருக்கிறது ஒரு பெண்ணோட கையிலனு சொல்லுவாங்க. நீ என்னை சந்தோஷமா வெச்சிருக்கே... அந்த சந்தோஷத்துல நான் உன்னை சந்தோஷமா வச்சிருக்கேன். அவ்வளவுதான். இது ஒரு வகையில் பார்த்தா கிவ் அண்ட் டேக் பாலிஸிதான்..''

கார் பார்க்கிங் வந்திருந்தது.

பல ஜாதிக் கார்களுக்கு மத்தியில் ஒரு குங்குமப் பொட்டு மாதிரி நின்றிருந்த - சிவப்பு மாருதிக்குள் ஏறினார்கள்.

கார் புறப்பட்டது. பார்க்கிங்கை விட்டு வெளியே வந்து விஸ்தாரமான ரோட்டின் போக்குவரத்தில் நிதானமாய் நீந்தியது. ரோட்டில் கொட்டியிருந்த வெளிச்சமும் இருட்டும் மாறி மாறி இருவர் மேலும் விழுந்து கலைந்தது. வித்யா அவனுடைய தோளில் மெல்ல தலையைச் சாய்த்தபடி குரலை இழுத்தாள்.

''அப்புறம்..''

''சொல்லு...''

''நேத்து ராத்திரி... நான் சொன்ன விஷயத்தைப் பத்தி யோசிச்சீங்களா?''

''என்ன விஷயம்...?''

அவன் இடுப்பைக் கிள்ளினாள். ''தெரியாத மாதிரி கேக்கிறதைப் பாரேன்...''

''நிஜம்மா தெரியலை...''

''லேசா ஹிண்ட் தர்றேன்...''

''குடு... குடு...''

''மரமோடு மரம் சாய்ஞ்சு மதுரமாய் பழுத்த பழம். எடுப்பார் உண்டு, தின்பார் இல்லை.''

''ஓ... குழந்தை...''

''அதுவேதான்...''

''என்ன திடீர்னு குழந்தை ஆசை. நீ தானே இன்னும் ரெண்டு வருஷத்துக்கு குழந்தை குட்டி பிடுங்கல் இல்லாமல் ஜாலியா இருக்கணும்னு சொன்னே...?''

''அப்போ சொன்னேன். ஆனா போன வாரம் என் ஃப்ரெண்ட் தமயந்தியை சூப்பர் மார்க்கெட்ல பார்த்தேன். எனக்குப் பின்னாடி கல்யாணமானவ. வயித்தைத் தூக்கிட்டு புருஷன் கூட பெருமையாப் போறா..! போதாக் குறைக்கு என் வயித்தைப் பார்த்துட்டு கேலியா... ஒரு நக்கல் சிரிப்பு வேறே...''

''அப்படியா சமாச்சாரம்?''

''ஆமாங்க..''

''ஆஹ்ஹா! என் மீசை துடிக்குது...! பெண் பாவாய்!''

''என்ன..?''

''தந்தேன் வரம்?''

''என்ன வரமோ...?''

''இன்றிலிருந்து சரியாய் முன்னூறாவது நாள்... உன் மடியில் ஒரு குழந்தை தவழும்...''

''எப்படி பிரபோ...?''

''அதுக்கு நான் கியாரண்டி...''

''வழியுது... ரோட்டைப் பார்த்து... காரை ஓட்டுங்க...''

''நீ பர்மிஷன் குடுத்துட்டியல்ல.. இனிமே பாரு அய்யாவோட திறமையை...''

''ச்சீ!'' உதயகுமாரின் தோள் பட்டையை இறுக்கினாள், வித்யா. கார் உற்சாகமாய் பறந்து - பயணத்தில் பத்து நிமிஷங்களைக்



கரைத்து - மௌபரீஸ் ரோட்டின் இரண்டாவது குறுக்குத் தெருவில் இருந்த - அந்த சிறிய பங்களாவுக்கு முன் நின்றது.

வித்யா இறங்கிப் போய் - காம்பௌண்ட் கேட்டை 'பளாச்' என்று திறக்க - கார் உள்ளே போய் போர்டிகோவில் நின்றது.

வித்யா சலித்துக் கொண்டே பின்னால் வந்தாள். ''ம்... இருந்த வாட்ச்மேனை... வேலையிலிருந்து நிப்பாட்டிட்டீங்க! வெளியே போய்ட்டு வந்தா ஒவ்வொரு தடவையும் கீழே இறங்கி கேட்டைத் திறக்க வேண்டியிருக்கு...''

''அந்த வாட்ச்மேன் சரியில்லை வித்யா. அவன் கிட்டே நான் எதிர்பார்த்த நேர்மை இல்லை. குடிக்கிறதுக்காக கார்டன் ஹோஸை திருடி வித்திருக்கான். அவனை நம்பி எப்படி வாட்ச்மேனா வெச்சிருக்கிறது...''

''வேற ஒரு நல்ல வாட்ச்மேன் கிடைக்கிற வரைக்குமாவது அவனை வெச்சிருந்திருக்கலாம்.''

''நோ! என்னிக்கு அவனோட கை நீளம்னு தெரிஞ்சதோ அன்னிக்கே அவனை வீட்டுக்கு அனுப்பிடறதுதான் நல்லது.''

''ம்... இனி எப்ப வாட்ச்மேன் கிடைப்பானோ?''

''ஆபீஸ்ல நாலைஞ்சு பேர்கிட்டே சொல்லி வெச்சிருக்கேன். சரி நீ போய் வீட்டுக்கதவைத் திறந்திட்டிரு... நான் காம்பௌண்ட் கேட்டை லாக் பண்ணிட்டு வந்துடறேன்..'' சொல்லிக் கொண்டே காம்பௌண்ட் கதவை நோக்கிப் போனான். அவன் கதவைச் சாத்திவிட்டு - வாசலுக்குத் திரும்பியபோது - வித்யா திகைப்போடு நின்றிருப்பதைப் பார்த்தான்.

''என்ன வித்யா... கதவைத் திறக்கலையா?''

''கதவு திறந்தே கிடக்கு... போகும் போது பூட்டிகிட்டுப் போனோமா இல்லையா?''

''சரியாய்த்தான் பூட்டிகிட்டுப் போனோம்..''

"அப்புறம் எப்படி..?"

"வா.. உள்ளே போய்ப் பார்க்கலாம்..." சொன்னவன் கைப் பிடியைக் கீழே தள்ளிக் கதவை விரித்தான்.

உள்ளே அடர் நீல நிறத்தில் ஜீரோ வாட்ஸ் பல்பு நோயாளித் தனமான வெளிச்சத்தைத் தந்து கொண்டிருந்தது. உதயகுமார் உள்ளே போய் சுவரில் இருந்த ஸ்விட்ச் போர்டைத் தடவி ஒரு ஸ்விட்சைத் தேய்த்தான்.

ட்யூப்லைட் பற்றிக் கொள்ள அறைக்குள் வெளிச்சம்.

வித்யா பின் தொடர்ந்தபடி சொன்னாள். "வீட்ல யாரும் இல்லாததைத் தெரிஞ்சுகிட்டு திருடங்க யாராவது வந்திருப் பாங்களா?"

"பார்க்கலாம்...வா.."

"மொதல்ல பீரோ இருக்கிற அறையைப் பாருங்க.."

"பதட்டப்படாதே! உன்னோட எல்லா நகைகளையும் பாங்க் லாக்கர்ல வெச்சிருக்கோம். கேஷும் அதிகமாயில்லை.."

"பட்டுப் புடவைங்க... வெள்ளிப் பாத்திரம் நிறைய இருக்கே... வந்த திருடனுக்கு எது கிடைச்சாலும் லாபம் தானே..?"

பீரோ இருந்த அறைக்குள் நுழைந்தார்கள்.

பீரோ பழுது படாமல் சாதுவாய் உட்கார்ந்திருந்தது. யாரும் அதன் மேல் கையை வைத்த மாதிரி தெரியவில்லை.

சாவியைப் போட்டுப் பீரோவைத் திறந்தார்கள்.

"வெச்சது வெச்ச மாதிரி அப்படியே இருக்கே..."

"மத்த ரூம்களையும் பார்த்துடலாம் வாங்க.."

போனார்கள். ரீடிங் ரூம், பூஜை ரூம், சமையல் ரூம் என்று வரிசையாய் பார்த்துக் கொண்டே - பின்பக்க வராந்தாவுக்கு வந்தார்கள்.

எல்லாமே அதனதன் இடத்தில் இருந்தன.



"வித்யா..."

"ம்..."

"நாமதான் கதவைப் பூட்டாமே போயிருக்கோம்..."

"எனக்குப் பூட்டின ஞாபகம் நல்லாயிருக்குங்க.."

"நீ சரியா கவனிச்சிருக்க மாட்டே..."

"என்னமோ... தெரியலீங்க... எனக்கு பயம்மாயிருக்கு..." சொல்லிக் கொண்டே பக்கவாட்டில் திரும்பி நடந்தவள் சட்டென்று நின்றாள்.

காலில் ஏதோ 'பசக்'கென்று ஒட்டிய உணர்வு.

குனிந்து பார்த்தாள்.

"என்ன வித்யா?"

"கால்ல என்னமோ ஒட்டுது.."

"கால்ல ஒட்டுதா?"

உதயகுமார் குனிந்து பார்த்தான்.

தரைப் பரப்பில் - துளித் துளியாய் உலராத ரத்தம். வித்யாவின் மூளைக்கும் அது 'ரத்தம்' என்று பிடிபட சின்னதாய் வீறிட்டாள்.

## 2

**வி**த்யாவும், உதயகுமாரும் அதிர்ந்து போய் - தரைப் பரப்பில் தெளித்திருந்த அந்த ரத்தப் போட்டுக்களையே பார்த்தார்கள்.

"எ... எப்படிங்க.. இவ்வளவு ரத்தம்?"

"தெ.. தெரியலையே..?"

''இந்தப் பக்கமா பாருங்க... ரத்தம் கொட்டிக்கிட்டே போயிருக்கு..''

உதயகுமார் பார்த்துவிட்டு - கர்ச்சீப்பால் நெற்றி வியர்வையை ஒற்றிக் கொண்டான். ''சம்திங்க ராங்... வித்யா..''

அந்த ரத்தப் பொட்டுக்களைப் பயமாய்த் தொடர்ந்தார்கள். வித்யாவின் இதயம் திசைக்கொரு பக்கம் இழுத்தபடி 'திக் திக்'கென்று துடித்தது.

ரத்தப் பொட்டுக்கள் பக்கத்திலிருந்து பாத்ரூமை நோக்கிப் போயிற்று.

''வித்யா! அந்த பாத்ரூம் லைட்டைப் போடு.''

அவள் நடுங்கிக் கொண்டே ஸ்விட்சைப் போட்டாள். சாத்தியிருந்த பாத்ரூமுக்குள் வெளிச்சம் பரவியது.

உதயகுமார் பாத்ரூம் கதவின் கைப்பிடியைப் பற்றி இழுத்தான். கதவு கிறீச்சென்று திறந்து கொள்ள -

உள்ளே -

அந்தப் பெண்ணின் உடல்.

தண்ணீர் இல்லாத பாத் டப்புக்குள் மல்லாந்து தெரிந்தது.

வித்யா மறுபடியும் வீறிட்டு - உதயகுமாரின் தோள்களைக் கெட்டியாய் பிடித்துக் கொண்டாள்.

''எ... என்னங்க... யா.. யார்ங்க.. இது?''

உதயகுமார் கண்கள் நிலை குத்த அந்தப்பெண்ணையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

''இது..யார்.. யார்ன்னு தெரியலையே?''

''என்னால் நிக்க முடியலைங்க... மயக்கமா வருது..''



உதயகுமார் அவளை வெளியே கூட்டி வந்தான். வியர்த்த முகமாய் சொன்னான். ''வித்யா! நமக்கு வேண்டாதவங்க யாரோ... இந்தக் காரியத்தைப் பண்ணியிருக்காங்கன்னு நினைக்கிறேன். உன்னையும் என்னையும் கொலைப் பழியில் மாட்டி விடறதுக்காக யாரோ போட்ட திட்டம்...''

''இப்ப என்னங்க பண்ணலாம்?''

''எனக்கு ஒண்ணும் தோணலை..''

''போலீசுக்குப் போன் பண்ணலாமா...?''

''திட்டம் போட்டு இதைப் பண்ணினவங்க.. இந்நேரம் போலீசுக்குத் தகவல் கொடுத்திருப்பாங்கன்னு நினைக்கிறேன்.''

''என்னங்க சொல்றீங்க?''

''பிசினஸ்ல எனக்கு எவ்வளவோ வேண்டாத எதிரிகள். அந்த எதிரிகளில் யாரோ ஒருத்தர்தான் இந்தக் காரியத்தைப் பண்ணி போலீஸ்ல என்னை மாட்டிவிட முயற்சி பண்ணியிருக்காங்க..''

''அவங்க போலீசுக்குப் போன் பண்ணி சொல்றதுக்குள்ளே நாம போன் பண்ணி சொல்லிட்டா..''

''அதுதான் சரி...''

உதயகுமார் வேகவேகமாய் ஹாலில் இருந்த டெலிபோனை நோக்கிப் போனான். ரிஸீவரை எடுப்பதற்குள் - வாசலில் காலிங் பெல் கதறியது.

பின் தொடர்ந்து வந்த வித்யா - நின்று திக்கென்று கணவனைப் பார்த்தாள். ''யார்ங்க... அது?''

''நான் போய்ப் பார்க்கிறேன்... பாத்ரூம் கதவை சாத்திட்டியா?''

''ம்... சாத்திட்டேன்..''

உதயகுமார் வாசல் கதவை நோக்கிப் போய் - பக்கவாட்டு ஜன்னலில் எட்டிப் பார்க்க வாசலில் -

ஒரு இன்ஸ்பெக்டர், ஒரு சப் - இன்ஸ்பெக்டர்.

3

''என்ன செய்யலாம்?''

யோசிப்பதற்குள் காலிங்பெல் மறுபடியும் நீளமாய் கதறியது. வித்யா உதயகுமார்க்கு பக்கத்தில் ஓடி வந்தாள். ''யார்ங்க?''

''போ.. போலீஸ்.''

''நாம போன் பண்ணி சொல்றதுக்குள்ளே வந்துட்டாங்களே.. இனிமே நாம சொல்றதை நம்புவாங்களா?''

''எப்படியும் அவங்களை நம்ப வைக்கணும்..''

காலிங்பெல் பொறுமையை இழந்து மறுபடியும் கதற - உதயகுமார் வேகமாய் போய்க் கதவின் தாழ்ப்பாளை நீக்கினான்.

அந்த இன்ஸ்பெக்டரும், சப் - இன்ஸ்பெக்டரும் உள்ளே நுழைந்தார்கள். உதயகுமார் சிறிது துணிச்சலை வரவழைத்துக் கொண்டு ''எஸ்'' என்றான்.

''இந்த வீட்டு நெம்பர் ட்வெல் 'ஏ'தானே?''

''ஆமா.''

''நீங்க மிஸ்டர் உதயகுமார்?''

''ஆமா...''

''எங்களுக்குப் பத்து நிமிஷங்களுக்கு முந்தி ஒரு டெலிபோன் கால் வந்தது. உங்க வீட்ல ஏதோ ஒரு அசம்பாவிதம் நடக்கிறதா..''

''அசம்பாவிதமா..?''

''எஸ்... ஒரு பெண்ணோட அலறல் சத்தம் கேட்டதாக ஒரு அநாமதேயக் கால் வந்தது. எங்களுக்கு அந்தப் போன் காலில் நம்பிக்கையில்லை... இருந்தாலும் விசாரிச்சுட்டுப் போலாம்ன்னு வந்தோம்... டெலிபோன்ல விளையாடற ஆசாமிங்க கொஞ்ச நாளா அதிகம்..?''



''அந்த மாதிரியெல்லாம் இங்கே எதுவும் நடக்கலை இன்ஸ்பெக்டர்! இன்னிக்கு எங்களோட ஃபர்ஸ்ட் வெட்டிங் அனிவர்ஸரி, சீமாட்டி சில்க் எம்போரியத்துக்குப் போய் ஒரு சேலையை பர்சேஸ் பண்ணிட்டு இப்பத்தான் வந்தோம்..''

''ஓ.. கே.. ஸாரி ஃபார்த டிஸ்டர்பன்ஸ்..''

இன்ஸ்பெக்டரும், சப்-இன்ஸ்பெக்டரும் காம்பௌண்ட் கேட்டுக்கு வெளியே நின்றிருந்த பைக்கை நோக்கிப் பேசிக் கொண்டே போனார்கள்.

''டெலிபோன்ல போகஸ் மெஸேஜ் தர்றவன் யார்ங்கிறதை சீக்கிரம் கண்டுபிடிச்சாகணும் ஸார். இல்லேன்னா தலைவலிதான்...''

''போன வாரம் நடிகை ஜெயப்பிரியா... குரு ஹோட்டல்ல பத்தாவது மாடியிலிருந்து விழுந்து தற்கொலை பண்ணிகிட்டதா.. சொன்ன நியூஸை நம்பி.. போலீஸ் டிபார்ட்மெண்டே ஹோட்டலுக்குப் பெயர்த்துகிட்டுப் போச்சே...? எப்பேர்ப்பட்ட அவமானம்..''

''டெலிபோன்ல இது மாதிரி நியூஸ் வந்தா.. நம்பவும் முடியலை... நம்பாமே இருக்கவும் முடியலை... ஸார்..''

''ஒரே ஆள் தான், குரலை மாத்தி மாத்திப் பேசறான்னு நினைக்கிறேன். கண்ணி வெச்சி பிடிக்கணும்.''

''டி.எஸ்.பி. கிட்டே இதைப் பத்திப் பேசணும்..''

பைக் உதைபட்டு இருவரையும் சுமந்து கொண்டு கிளம்பிப் போனதும் - வித்யா உதயகுமாரிடம் திரும்பினாள்.

''ஆமா.. போலீஸ்ல... உண்மையைச் சொல்லாம ஏன் மறைச்சுட்டீங்க... அந்த இன்ஸ்பெக்டர்கிட்டே சொல்லியிருக்க லாமே?''

''வித்யா! போலீஸ்ல உண்மையைச் சொல்றதுக்குத்தான் இருந்தேன். அதுக்குள்ளே அவங்க பேசின பேச்சு என்னோட எண்ணத்தை மாத்திருச்சு. எங்களுக்கு அந்த போன்கால்ல நம்பிக்கையில்லை.. இருந்தாலும் விசாரிச்சுட்டுப் போலாம்ன்னு வந்தோம். டெலிபோன்ல விளையாடற ஆசாமிங்க கொஞ்ச நாளா அதிகம்... ன்னு அந்த இன்ஸ்பெக்டரும், சப் இன்ஸ்பெக்டரும் பேசிக்கிட்டாங்க... அதைப் பயன்படுத்தியே இந்தக் கொலைப் பழியிலிருந்து நாம் தப்பிச்சுக்கப் போறோம்..''

''எப்படி?''

''அந்தப் பெண்ணோட பாடியை இங்கிருந்து உடனடியா டிஸ்போஸ் பண்ணி வீட்டை சுத்தப்படுத்திட்டா பிராப்ளம் ஓவர்!''

''பாடியை எப்படி டிஸ்போஸ் பண்றது?''

''எங்கேயாவது ஒரு பக்கம் கொண்டு போய் தள்ளிட வேண்டியதுதான். வீட்டை... பெனாயில் போட்டு சுத்தமா.. அலம்பிட்டா நாளைக்கு ஏதாவது போலீஸ் வந்து பார்த்தாலும்.. எதுவும் தட்டுப்படாது..''

''நாம எதைப் பண்ணினாலும் சீக்கிரம் பண்ணியாகணும். டெட் பாடியை வீட்ல வெச்சிட்டிருக்கிறது... எந்த நிமிஷத்திலும் ஆபத்துத்தான்..''

''சரி.. நீ வெளியே போய் நின்னு யாராவது வர்றாங்களான்னு பார்த்துக்க... நான் பாடியைக் கொண்டாந்து காரில் ஏத்திடறேன்..''

தலையாட்டிய வித்யா வெளியே போய் நின்று கொள்ள உதய்குமார் உள்ளே போய் - ஒரு பழைய பெட்ஷீட்டில் டெட்பாடியைச் சுற்றி - மூச்சைப் பிடித்துத் தூக்கிக் கொண்டு வந்து - காரின் டிக்கியில் கிடத்தினான். மேலும் ஒரு பதினைந்து நிமிஷத்தை செலவழித்து - ரத்தக் கறை படிந்த இடங்களைத் துடைத்துச் சுத்தம் செய்து விட்டு - வீட்டைப் பூட்டிக் கொண்டு கார்க்கு வந்தான்.



''எ.. என்னங்க மு.. முடிஞ்சுதா?''

''ம்.. கார்ல ஏறி உட்கார்... இதை ஏதாவது ஒரு ரெயில்வே லைன்ல போட்டுட்டு வந்துடலாம்..''

வித்யா நடுங்கிக் கொண்டே கார்க்குள் ஏறினாள். கார் சீறிப் புறப்பட்டது.

## 4

கார் போக்குவரத்தில் கலந்து - சிட்டி அவுட்டரைத் தாண்டியதும் ஹைவேஸ் ரோடு நிசப்தமாய் இருட்டாய் வந்தது.

''என்னங்க..?''

''ம்...''

''டெட் பாடியை - இப்படியே எங்கேயாவது ரோட்டோரமா எறிஞ்சிட்டுப் போயிடலாமே..?''

''வேண்டாம். பாடி முழுசாய் இருக்கிறது, நாளைக்கு நமக்குப் பிரச்னையாகிவிடும். பாடி சிதையணும். அதுதான் முக்கியம்.''

''ரயில்வே ட்ராக்கில் பாடியைக் கொண்டு போய்ப் போடும் போது யாராவது பார்த்துட்டா?''

''யாராவது பார்க்கிறபடியாகவா.. கொண்டு போய் போடுவோம்... இன்னும் ரெண்டு கிலோ மீட்டர் போயிட்டா.. ஆள் நடமாட்டமே இல்லாத ரயில்வே ட்ராக் வரும். நிமிஷ நேரம்தான்... பாடியைக் கிடத்திட்டு வந்துடலாம்.''

''உங்க பிஸினஸ் எதிரிகள்ல யார்ங்க இந்தக் காரியத்தைப் பண்ணியிருப்பாங்க?''

''என்னோட சந்தேகமெல்லாம் அந்த வீனஸ் நாகராஜன் மேல்தான்.. சமீபத்துல பத்து லட்ச ரூபாய் டெண்டர்ல.. எனக்கும்

அவனுக்கும் சரியான போட்டி. கடைசியில் அந்த டெண்டர் எனக்குத்தான் கிடைச்சது. அந்தக் கோபம் அவனுக்கு இருக்கலாம்.''

''வியாபாரத்துல இருக்கிற போட்டி பொறாமையை இப்படியா காட்டணும்?''

''அதான் மனுஷனோட குணம்..''

''அந்த.. நாகராஜன் மேல் நாம எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாதா?''

''எப்படி முடியும்...? அவன் தான் இந்தக் காரியத்தைப் பண்ணினான்னு நம்மாலே நிரூபிக்க முடியுமா..? இது நிழல் காரியம்..''

- சொல்லிக் கொண்டிருந்த உதயகுமாரின் கண்களில் ரோட்டில் குறுக்கே யாரோ ஒருவர் கையை ஆட்டியபடி நின்றிருப்பதைப் பார்த்ததும் பிரேக்கை அழுத்தினான். கார் கிறீச்சிட்டு ரோட்டோரமாய் நின்றது.

அந்த நபர் ஓடி வந்து - ட்ரைவிங் சீட் அருகே குனிந்தார். ''ஸார்... நான் பாடியூர் போயிட்டிருக்கேன். வழியில கார் நின்னுடுச்சு... பெட்ரோல் சுத்தமா இல்லை.. உங்க கார்ல ஏதாவது எக்ஸ்ட்ரா பெட்ரோல் இருக்கா?''

''இல்லையே..! கேன்ல நான் பெட்ரோல் வெச்சுக்கிறதில்லை.''

''நீங்க எங்கே போறீங்க?''

''ப... பக்கத்தில் இருக்கிற.. ஒரு எக்ஸ்டன்ஷன் ஏரியாவுக்கு..''

''பெட்ரோல் இந்த ஏரியாவில் எங்கே கிடைக்கும்?''

''இன்னும் பத்து கிலோ மீட்டர் போனா... ஹைவேஸ் ரோட்ல ஒரு பெட்ரோல் பங்க் வரும்... ஏதாவது லாரி பிடிச்சு போனீங்கன்னா கேன்ல பெட்ரோல் வாங்கிட்டு வந்துடலாம்.''



''கைகாட்டினா லாரிக்காரன் நிறுத்த மாட்டான். உங்க கார்ல எனக்கு உதவ முடியுமா?''

''ஸாரி.. நாங்க அவசரமா போயிட்டிருக்கோம்.. நீங்க லாரியை ட்ரை பண்ணுங்க..''

சொல்லிக்கொண்டே காரை நகர்த்தினான் உதயகுமார். கார் சிறிது தூரம் போனதும் வித்யா சொன்னாள்.

''பாவங்க அந்த ஆளு..''

''பாவம்தான்! என்ன செய்யறது? அவனுக்கு உதவி பண்ணப் போய் உபத்திரவத்துல நாம மாட்டிக்கிறதா...? டிக்கியில் பிணத்தை வெச்சுகிட்டு வழியில வர்றவனுக்கும் போறவனுக்கும் உதவி பண்ணிட்டிருக்க முடியுமா?''

ஆளில்லாத ஒரு லெவல் கிராஸிங்கை கார் கடந்து சிறிது தூரம் போனதும் - அடர்ந்த மரத்துக்குக் கீழே காரை நிறுத்தினான் உதயகுமார்.

''இந்த இடம்தான் வசதியான இடம்..''

''ரயில்வே டிராக் எங்கே போகுது..?''

''அதோ.. அந்தக் கற்றாழை புதர்க்கு மத்தியில்..''

வித்யா பயமாய் கண்களை நான்கு திசைகளிலும் சுழற்றினாள். எங்கேயும் ஒரு பொட்டு வெளிச்சம் கூட இல்லை.

உதயகுமார் காரினின்னும் கீழே இறங்கி - டிக்கியைத் திறந்து பெட்ஷீட்டோடு சேர்த்து டெட் பாடியைத் தூக்கிக் கொண்டான்.

''வித்யா..''

''ம்..''

''யாராவது வர்றாங்களான்னு பார்த்துக்க.. நான் நிமிஷத்துல பாடியைக் கொண்டு போய் - ட்ராக்ல போட்டுட்டு வந்துடறேன்..''

''கார்ல தனியா உட்கார்ந்திருக்க... பயமாயிருக்குங்க... நானும் உங்க கூடவே வர்றேன்..''

''சரி.. வா... பாடியோட கால் பக்கம் நீ பிடி..''

அவள் பிடித்துக் கொண்டாள்.

நிமிஷ நடை தூரத்தில் கற்றாழைப் புதர்கள் வந்தது. நடுவே நட்சத்திர வெளிச்சத்தில் - தண்டவாளம் இரு வெள்ளிக் கோடுகளாய் மின்னியது. தொலைவில் சிக்னல் போஸ்ட்டில் - ரத்தச் சிவப்பாய் ஒரு விளக்கு ஒளிர்ந்தது.

இரண்டு பேரும் மூச்சிரைக்க தண்டவாளத்தின் மையத்திற்கு வந்தார்கள். பெட்ஷீட்டை உருவிக் கொண்டு உடம்பை ஸ்லீப்பர் கட்டைகளுக்கு மத்தியில் கிடத்தினார்கள்.

''இந்த பெட்ஷீட்டை என்னங்க பண்றது?''

''வீட்டுக்குப் போனதும் கொளுத்திடலாம்.''

கார்க்கு வந்தார்கள்.

கார் வீட்டை நோக்கி போய்க் கொண்டிருந்தபோது - வித்யா சொன்னாள். ''எனக்கு நம்ம வாட்ச்மேன் மேலேயும்... கொஞ்சம் சந்தேகம். நீங்க அவனைத் துரத்தி விட்டதை மனசுல வெச்சுகிட்டு கோபத்துல இப்படி ஏதாவது பண்ணியிருப்பானோ?''

''எனக்கு அப்படித் தோணலை..''

''எதை வெச்சு.. அவன் பண்ணியிருக்க மாட்டான்னு சொல்றீங்க?''

''அவனுக்கு நம்ம மேல கோபம் இருந்தது. வாஸ்தவம்தான். அதுக்காக ஒரு கொலை பண்ற அளவுக்கெல்லாம் அவன் போயிருக்க மாட்டான். அது போக செத்துப் போன பொண்ணு கொஞ்சம் மாடர்ன் டைப்பா இருந்தா... செல்வத்துக்கும் இவனுக்கும் எந்த சம்பந்தமும் இருக்க வாய்ப்பில்லை.



கொலையாளிக்கு ரெண்டு மோடீவ் இருந்திருக்கணும். ஒண்ணு என்ன காரணத்துக்காகவோ அந்தப் பொண்ணை கொலை செய்யணும்ங்கிற மோடிவ். ரெண்டாவது செஞ்ச கொலையை என் மேல போடறதின் மூலம் என்னை மாட்டி விடறது. அந்தப் பொண்ணுக்கும் எனக்கும் பொது எதிரியா இருந்த ஒருத்தன் தான்... இந்தக் காரியத்தைப் பண்ணியிருக்கணும். அவன் வீனஸ் நாகராஜனாகவும் இருக்கலாம்... இல்ல வேற யாராவதாகவும் இருக்கலாம்.''

வித்யா தன் தலையை இரண்டு கைகளாலும் பற்றிக் கொண்டு காரின் சீட்டுக்குப் பெரு மூச்சோடு சாய்ந்தாள்.

''இன்னிக்கு நம்ம வெட்டிங் டே அனிவர்ஸரி... சாயந்திரம் வரைக்கும் இருந்த சந்தோஷம்... இப்ப இல்லை... இனி அந்த வீட்ல இருக்கிற ஒவ்வொரு நிமிஷமும்.. அந்தப் பெண்ணோட டெட் பாடிதான் ஞாபகத்துக்கு வரும்..''

''வித்யா ஒரு காரியம் பண்ணலாமா..?''

''என்ன..?''

''வாரம் பத்து நாள்... எங்கேயாவது வெளியூர் போயிடலாமா?''

''எங்கே போறது?''

''பெங்களூர் போயிடலாம். ஏதாவது ஒரு ஹோட்டல்ல ரூம் எடுத்துக்கிட்டு..''

காரின் வேகம் சட்டென்று குறைந்தது.

''எ... என்னங்க?'' - வித்யா கேட்டுக் கொண்டே ரோட்டைப் பார்த்தாள்.

ரோட்டின் குறுக்கே -

காரின் ஹெட்லைட் வெளிச்சத்தில் -

சற்று முன் வீட்டுக்கு வந்திருந்த - அந்த இன்ஸ்பெக்டர் தெரிய - ரோட்டோரமாய் போலீஸ் ஜீப்பொன்று நின்றிருந்தது.

## 5

**கா**ர் கிறீச்சிட்டு நிற்க - இன்ஸ்பெக்டர் பூட்ஸ் சத்தத்தோடு பக்கத்தில் வந்து உதயகுமாரிடம் குனிந்தார்.

''ப்ளீஸ் கெட் டவுன்..''

உதயகுமார் எச்சில் விழுங்கி வியர்த்துக் கொண்டு கீழே இறங்கினான். ''எ.. எஸ்.. இன்ஸ்பெக்டர்..''

''உங்க மனைவியையும் காரை விட்டு இறங்கச் சொல்லுங்க..''

வித்யா சேலைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு உடல் நடுங்க கீழே இறங்கி - கணவனின் தோளை ஒட்டியபடி நின்றாள்.

இன்ஸ்பெக்டர் அகலமாய் புன்னகைத்தார். ''ரெண்டு பேரும் தம்பதி சகிதமா, இந்த ராத்திரி நேரத்துல எங்கே போய்ட்டு வர்றீங்க?''

வித்யாவுக்கு உடம்பெல்லாம் உலர்ந்து போன மாதிரி உணர்வு. உதயகுமார் கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு வாயை அசைத்தான். ''இன்ஸ்பெக்டர் இன்னிக்கு எங்க ரெண்டு பேரோட வெட்டிங் டே..''

''அதனால..''

''பக்கத்தில் இருக்கிற ராஜன் நகர்ல ஒரு வயசான சாமியார் இருக்கார். முக்கியமா விசேஷ நாட்களில் அவரைப் பார்த்து ஆசீர்வாதம் வாங்கிட்டு வர்றது எங்க பழக்கம்..''



''ராஜன் நகர் வேற ரூட்டாச்சே?''

''அந்த மட்ரோடு.. அதுக்கு ஷார்ட் கட்..''

''சாமியார்கிட்டே ஆசீர்வாதம் வாங்க உங்களுக்கு இந்த ராத்திரி நேரம்தான் கிடைச்சதா?''

''பகல் நேரத்துல அங்கே கூட்டம் அதிகம் இருக்கும். ப்ரீயா அவரைப் பார்க்கிறது கஷ்டம். ராத்திரி நேரத்துல பூஜையை முடிச்சிக்கிட்டு கொஞ்சம் ஓய்வா இருப்பார். அதான் இந்த நேரத்துல கிளம்பினோம்.''

''சாமியாரைப் பார்த்தீங்களா?''

இன்ஸ்பெக்டர் உதட்டை அலட்சியமாய்ச் சுழித்து - கேட்ட கேள்வியில் வித்யாவுக்கு அடி வயிறு கலங்கியது.

''இ... இல்லை..'' என்றான் உதயகுமார்.

''ஏன்?''

''பாதி வழியில்தான்.. ப்யூவல் லெவல் கேஜை கவனிச்சேன். பெட்ரோல் குறைவா இருக்கும்னு தெரிஞ்சது. சாமியாரோட ஆசிரமம் வரைக்கும் போய்ட்டு சிட்டிக்கு திரும்ப முடியுமாங்கற சந்தேகம் வந்தது. பாதி வழியிலேயே திரும்பிட்டோம்..''

''உங்களுக்கு என்ன பிசினஸ் உதயகுமார்?''

''மெஷின் டூல்ஸ்.''

''அந்த கம்பெனியை இழுத்து மூடிட்டு.. பேசாமே சினிமா தயாரிக்கப் போயிடுங்களேன்... நல்லா ஓடும்..!''

''ஸார்..!''

''நிஜமாத்தான் சொல்றேன்..! நீங்க இப்ப சொன்ன கதை அவ்வளவு அருமையா இருந்தது.''

''இ.. இன்ஸ்பெக்டர்.. வந்து..''

''பொய் சொல்லி போலீஸை ஏமாத்தறது... நீங்க நினைக்கிற அளவுக்கு சுலபமான விஷயமில்லை.. சொல்லுங்க... எதுக்காக அந்தப் பொண்ணைக் கொலை பண்ணீங்க?''

''கொ.. கொலையா?''

இன்ஸ்பெக்டர் முகத்தில் இருந்த சிரிப்பு காணாமல் போயிற்று.

''இதோ பாருங்க உதயகுமார்.. உங்க வீட்டுக்கு கொஞ்ச நேரத்துக்கு முந்தி - விசாரணை பண்றதுக்காக வந்தப்பவே... உங்க ரெண்டு பேரோட முகத்தில் அப்பிக் கிடந்த பயத்தையும், கலக்கத்தையும் பார்த்தேன். டெலிபோன்ல எங்களுக்கு வந்த மெஸேஜ் மொதல்ல பொய்ன்னுதான் நினைச்சோம். ஆனா... உங்க ரெண்டு பேரோட கலவரம் எங்களுக்கு சந்தேகமாக இருந்தது. வீட்டை வாட்ச் பண்ணினோம். கொஞ்ச நேரத்துக்குள்ளே... காரோட டிக்கியில் எதையோ எடுத்து வெச்சீங்க... வீட்டைப் பூட்டிக்கிட்டீங்க... புறப்பட்டீங்க.. நாங்களும் உங்களுக்குத் தெரியாமே ஃபாலோ பண்ணினோம்.. நீங்க ரெயில்வே ட்ராக்கில போட்ட பாடி இந்நேரம் போலீஸ் வசம்... இப்ப மறைக்காம சொல்லுங்க..! யார் அந்தப் பெண்? எதுக்காகக் கொலை பண்ணீங்க..?''

வித்யாவின் விழிகள் வெள்ள அபாயத்தைத் தாண்டியது. உதயகுமார் அவசர அவசரமாய் மறுத்தான்... ''இன்ஸ்பெக்டர் நீங்க நினைக்கிற மாதிரி.. நாங்க அந்த கொலையைச் செய்யலை..''

''பின்னே யார் பண்ணினாங்க?''

''தெரியாது... அந்தப் பெண்ணோட டெட்பாடி... எங்க வீட்டு பாத் டப்ல இருந்தது. நாங்க வெளியே போய்ட்டு வீட்டுக்குள்ளே வந்தப்ப...'' என்று ஆரம்பித்து நடந்த சம்பவங்களைச் சொன்னான் உதயகுமார்.



இன்ஸ்பெக்டர் செவி மடுத்துவிட்டு - தன் கிருதாவைக் கீறினார். ''அப்படீன்னா, அந்தப் பொண்ணு யார்ன்னே உங்களுக்குத் தெரியாது..''

''தெரியாது..''

''இதுக்கு முந்தி அந்தப் பொண்ணைப் பார்த்ததே இல்லை?''

''இல்லை...''

''நீங்க ஸில்க் எம்போரியத்துக்கு போய்ட்டு - வீடு திரும்பும்போது - கதவோட பூட்டு திறந்தே இருந்ததா?''

''ஆமா..''

இன்ஸ்பெக்டர் மறுபடியும் அலட்சியச் சிரிப்பைக் காட்டினார். ''நீங்க சொல்றது எதுவும் நம்பற மாதிரி இல்லையே..?''

''நாங்க சொன்னது உண்மை இன்ஸ்பெக்டர்... ப்லீவ்.. அஸ்...''

''ஸாரி... நீங்க எதைச் சொல்றதாயிருந்தாலும் ஸ்டேஷனுக்கு வந்து சொல்லுங்க... மிஸஸ் வித்யா உங்களுக்கு கார் ஓட்டத் தெரியுமா?''

''தெ.. தெரியும்..''

''நீங்க இந்தக் காரை ஓட்டிகிட்டு - என் ஜீப்புக்கு பின்னாடியே வாங்க.. உங்க கணவரும் நானும் ஜீப்பில் போறோம்..''

''இன்ஸ்பெக்டர் நாங்க சொல்றதை?''

''ஸாரி.. இங்கே எதையும் பேச வேண்டாம்... ஸ்டேஷனுக்குப் போயிடலாம், வாங்க உதயகுமார்..''

ஜீப்புக்குக் கூட்டிப் போனார்.

ஜீப் முதலில் போக - கார் பின் தொடர்ந்தது. சுமார் இருபது நிமிஷ பயணத்திற்குப் பின் - வித்யாவிடம் லேசாய் திகைப்புத் தெரிந்தது.

ஜீப் அவர்களுடைய பங்களாவுக்குள்தான் நுழைந்தது. போர்டிகோவுக்குள் போய் ஜீப் என்ஜினை அணைத்துக் கொள்ள - வித்யா காரை அதற்குப் பின்னால் கொண்டு போய் நிறுத்தினாள். இறங்கி வேகமாய் அவர்களை நோக்கிப் போனாள். உதயகுமார் ஆச்சரியமாய்க் கேட்டுக் கொண்டிருந்தான்.

''இன்ஸ்பெக்டர் எங்களை ஸ்டேஷனுக்கு கூட்டிக்கிட்டுப் போறதா சொல்லிட்டு, வீட்டுக்கே கூட்டிட்டு வந்திருக்கீங்களே?''

இன்ஸ்பெக்டர் புன்னகைத்தார். ''வழி பூராவும் ஒரே யோசனை, நீங்க சொல்ற ஸ்டேட்மெண்ட்டைப் பார்க்கும் போது - உங்க பேர்ல எந்தத் தப்பும் இல்லைன்னு என் மனசுக்குப் படுது. இந்தக் கேஸை வேறு கோணத்திலிருந்து டீல் பண்ணனும். வீட்டுக் கதவைத் திறங்க. உள்ளே போய்ப் பேசலாம்.''

''தாங்க்ஸ் இன்ஸ்பெக்டர்... எங்க பக்கம் இருக்கிற உண்மையை நீங்க புரிஞ்சுக்கிட்டதுக்காக... நன்றி...''

வித்யா கதவைத் திறக்க - மூன்று பேரும் உள்ளே போனார்கள். ட்ராயிங் அறைக்குள் நுழைந்து... 'ப' ஷேப் சோபா செட்டை ஆக்ரமித்தார்கள்.

இன்ஸ்பெக்டர் நன்றாக சாய்ந்து உட்கார்ந்து கொண்டு கேட்டார். ''நீங்க அந்தப் பெண்ணைக் கொலை செய்யலை. யாரோ கொலை பண்ணி - டெட் பாடியை உங்க பாத்ரூம்ல போட்டுட்டதா சொல்றீங்க, இல்லையா..?''

''ஆமா..''

''யாரோ கொலை செஞ்சிருக்கிற பட்சத்தில் நீங்க உடனே போலீசுக்குத் தகவல் குடுத்திருக்கலாமே..?''

''மொதல்ல உண்மையைச் சொல்லிடலாம்னுதான் நினைச்சோம். அப்புறம், நீங்க வந்துட்டுப் போன பின்னாடி... இந்தக் கேஸ்ல இன்வால்வ் ஆகாமலேயே... தப்பிச்சுக்கலாம்னு என் மனசுக்குப் பட்டது. அது எவ்வளவு பெரிய தப்புன்னு இப்பத்தான் புரியுது..''



''உண்மையாவே... பாடியை நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து டிஸ்போஸ் பண்ணியது பெரிய தப்பு. நீங்க என்கிட்டே சொன்ன இதே ஸ்டேட்மெண்ட்டை போலீஸ் சுப்பீரியர்ஸ் கிட்டே சொன்னா.. அவங்க உங்களை ஒரு பர்சென்ட் கூட நம்ப மாட்டாங்க. சம்பவங்கள் நிஜமா பொய்யா என்கிறதைப் பத்தி அவங்களுக்கு கவலையில்லை. என்னோட ஸ்டேட்மெண்ட்டை வெச்சும்.. நீங்க அவசர அவசரமா பிணத்தைக் கொண்டு போய் டிஸ்போஸ் பண்ணியதை வெச்சும்... அந்தக் கொலைக்குக் காரணம் நீங்க என்கிற முடிவுக்கு அவங்க சுலபமா வந்திடுவாங்க. ஒரே வாரத்தில் கேஸை ஃபைல் பண்ணி - உங்களைக் கோர்ட்டுக்குக் கொண்டு போய் நிறுத்த - அவங்களாலே முடியும்.''

''ஸா.. ஸார்..''

''இந்த விஷயத்துல நான் உங்களுக்கு உதவ முடியும்..''

அவர்கள் திகைக்க -

''எப்படின்னு கேளுங்க..! போலீஸ் ஸ்டேஷன் வாசலுக்கே இந்தக் கேஸ் போகாதபடி செஞ்சுடலாம்... பரஸ்பரம் நீங்களும் நானும் சில ஏற்பாடுகளைப் பண்ணிக்கணும்..''

''இன்ஸ்பெக்டர்! நிஜமாவே நாங்க இந்தக் கொலையைச் செய்யலை.''

''அதெல்லாம் சட்டத்துக்குத் தெரியாதே. அதுக்குத் தெரிஞ்சதெல்லாம் வெறும் சாட்சியங்கள். தடயங்கள்...ஸ்டேட்மெண்ட்ஸ்... இவ்வளவுதான்..''

''நீங்க எங்களை எப்படிக் காப்பாத்த முடியும் இன்ஸ்பெக்டர்?''

''உங்க விவகாரம் எனக்கும், எனக்குக் கீழே இருக்கிற ஒரு சப்-இன்ஸ்பெக்டருக்கும் மட்டும்தான் தெரியும்... கேஸை எஃப்.ஐ.ஆர்க்கு கொண்டு போகாமே அழகா முடிக்கலாம்..''

''முடியுமா..?''

''முடியும்.. உங்களாலே பணம் செலவழிக்க முடிஞ்சா?''

# 6

**இ**ன்ஸ்பெக்டர் என்ன சொல்ல வருகிறார் என்பது உதயகுமாருக்கும் - வித்யாவுக்கும் அப்பட்டமாய்ப் புரிந்தது

"எவ்வளவு பணம் செலவாகும் இன்ஸ்பெக்டர்?"

"எனக்கு அம்பதாயிரம்... சப் - இன்ஸ்பெக்டர்க்கு இருபத்தஞ்சாயிரம், விஷயத்தை கமுக்கமா முடிச்சுடலாம்.."

உதயகுமாரும் வித்யாவும் ஒருத்தரையொருத்தர் திகைப்பாய் பார்த்துக் கொண்டார்கள்.

இன்ஸ்பெக்டர் புன்னகைத்தார். "உங்க நிலைமைக்கு இந்தத் தொகை ரொம்பவும் குறைச்சல்தான். பேராசைப்பட்டு லட்சக் கணக்கில் நான் பணம் கேட்கலை. உங்களாலே சுலபமா கொடுக்க முடிஞ்சதைத்தான் கேட்டிருக்கேன்."

"பணத்தைக் குடுத்துட்டா பிரச்னை முடிஞ்சுடுமா.. இன்ஸ்பெக்டர்?"

"முடித்து வைக்க நாங்களாச்சு."

"அந்தப் பெண்ணோட டெட் பாடி?"

"அதைப் பத்தி கவலையே பட வேண்டாம். எங்க பீட் எல்லையில் ரோட்டோரமா ஒரு பெண்ணோட டெட் பாடி இருந்ததாக சொல்லி - அதை மார்ச்சுவரிக்கு அனுப்பிக் கேஸை திசை திருப்பிடுவோம்.."

உதயகுமார் தாடையைத் தடவிக் கொண்டு அப்படியே உட்கார்ந்திருந்தான்.

"என்ன யோசிக்கிறீங்க?"



"இன்ஸ்பெக்டர்! இதுல இன்னொரு பிரச்சனை இருக்கு?"

"என்ன..?"

"அந்தப் பெண்ணை கொலை செஞ்சு - பாடியைக் கொண்டு என் வீட்ல போட்ட எதிரியோட குறிக்கோள் என்னைப் போலீஸ்ல மாட்ட வைக்கணும்ங்கிறதுதான்! நீங்க கேஸின் ஃபைல்களைக் க்ளோஸ் பண்ணிட்டா அந்த எதிரி சும்மா இருக்க மாட்டானே?"

இன்ஸ்பெக்டர் சிரித்தார்.

"கேஸை ஹேண்டில் பண்ணப் போறவங்க நாங்க. அதை எந்த இடத்துல லாக் பண்ணனும்ங்கிற விஷயம் எங்களுக்குத் தெரியும்."

"உங்களுக்குப் பணம் எப்போ வேணும்..?"

"நாளைக்குக் காலையிலே.."

"இங்கேயே வந்து வாங்கிக்கறீங்களா?"

"இனிமே உங்க வீட்டுக்கு நானோ.. என்னோட பீட் சப் - இன்ஸ்பெக்டரோ வரமாட்டோம். நாளைக்குக் காலையில் பத்து மணிக்கு ஹோட்டல் 'சதர்ன்'க்கு வாங்க. இல்ல... பணம் இப்பவே வீட்ல இருந்தாலும் குடுத்துடுங்க.."

"அவ்வளவு பணம் வீட்ல இல்லையே.."

"அப்படீன்னா நாளைக்கு பேங்க்ல பணத்தை எடுத்துகிட்டு ஹோட்டல் சதர்ன்க்கு வாங்க. நான் மஃப்டியில் இருப்பேன்.."

"ஹோட்டல்ல உங்களை எங்கே வெச்சுப் பார்க்கிறது?"

"ரிசப்ஷன் ஹால் சோபாவில் உட்கார்ந்திட்டிருப்பேன். வாங்க... பணத்தை ஒரு ப்ரீப்கேஸ்ல போட்டுக் கொண்டாந்துடுங்க.."

"ஃபைலைக் க்ளோஸ் பண்ணின பின்னாடி எந்தப் பிரச்னையும் வராதே இன்ஸ்பெக்டர்."

''வராமே பார்த்துக்க வேண்டியது என்னோட வேலை.. பை த பை... நான் ஒரு போன் பண்ணிக்கலாமா...? நமக்குள்ளே நடந்த பேச்சு வார்த்தையை சப் - இன்ஸ்பெக்டர்க்குத் தெரியப்படுத்த ணும்..''

உதயகுமார் ஹாலுக்கு கூட்டிப் போய் - டெலிபோனைக் காட்ட இன்ஸ்பெக்டர் ரிஸீவரை எடுத்துக் கொண்டு - டயலைச் சுழற்றினார்.

''ஹலோ - பி ஸிக்ஸ் போலீஸ் ஸ்டேஷன்?''

''....''

''யாரு.. டூ நாட் த்ரீயா..?'' சப் - இன்ஸ்பெக்டர் இருக்காரா?''

''...''

''ரிஸீவரை அவர்கிட்டே குடுய்யா..''

''....''

''ஹலோ... மிஸ்டர் தியாகராஜன்! நான் உதயகுமார் வீட்லயிருந்து பேசிட்டிருக்கேன். இங்கே ப்ராப்ளம் சால்வ்ட்... ஃபைலை க்ளோஸ் பண்ணிடலாம்..''

''.....''

''அமௌண்ட் நாளைக்குக் காலையில் பதினோரு மணிக்குக் கிடைக்கும். எஸ்.எஸ். பேசின தொகைதான்..''

''...''

''டெட்பாடி தானே? ஜீப்லயே இருக்கட்டும். நான் வந்து என்ன பண்ணணுங்கிறதை... சொல்றேன்''

''...''

''விஷயம் கமுக்கமாகவே இருக்கட்டும்...'' - ரிஸீவரை வைத்துவிட்டு உதயகுமாரிடம் திரும்பினார் இன்ஸ்பெக்டர்.



''இன்னிக்கு ராத்திரிக்குள்ளே மத்த காரியங்களை சத்தமில்லாமே முடிச்சுடுவோம்... நீங்க ரெண்டு பேரும் நிம்மதியா குளிச்சுட்டு - சாப்பிட்டுப் படுத்துக்கலாம்... நாளைக்குக் காலையில உங்க ரெண்டு பேர்ல யாராவது ஒருத்தர் ஹோட்டல் 'சதர்ன்'க்கு பணத்தோட வந்துடுங்க... இப்ப நான் புறப்படறேன்..''

விடை பெற்றுக் கொண்டு - வெளியே போனார் இன்ஸ்பெக்டர் அடுத்த சில நிமிடங்களில் ஜீப் புறப்பட்டுப் போகும் சத்தம் கேட்டது.

வித்யா கதவைச் சாத்தி தாழிட்டு வந்தாள். கடந்த இரண்டு மணி நேரத்தில் முகம் அடிக்கடி வியர்த்து - வியர்த்து விட்டதில் - ஒரு மாதிரியாய் கறுத்து உலர்ந்து போயிருந்தது.

''வித்யா..''

''ம்..''

''இந்த இன்ஸ்பெக்டரை எந்த அளவுக்கு நம்பறதுன்னு தெரியலை. பணத்தையும் வாங்கிக்கிட்டு கேஸிலேயும் மாட்டி விட்டுட்டா..?''

''எனக்கு அந்த மாதிரி தோணலைங்க..''

''என் மனசுக்குள்ளே ஒரு சந்தேகம்..''

''என்ன...? இப்ப வந்தவர்.. நிஜமான இன்ஸ்பெக்டரா? இல்லை போகஸா...?''

''ஏன் சந்தேகப்படறீங்க?''

''பேரம் பேசறதைப் பார்த்தா... மனசுக்குள்ளே ஒரு நெருடல். அந்த டெலிபோன் டைரக்டரியைக் கொண்டா..''

''எதுக்கு?''

''இன்ஸ்பெக்டர் பீட் ஸ்டேஷன் ஸிக்ஸ்தானே?''

"ஆமா.."

"அங்கே இருக்கிற சப்- இன்ஸ்பெக்டர் பேரு.. தியாகராஜன் இல்லையா?"

"அப்படித்தான்.. போன்ல சொன்னார்.

"அந்த பி.ஸிக்ஸ் ஸ்டேஷனுக்கு போன் பண்ணி உண்மையிலேயே அங்கே சப் - இன்ஸ்பெக்டர் தியாகராஜன் இருக்காரான்னு என்கொயர் பண்ணிப் பார்த்துடலாமா?"

"இந்த 'டெஸ்டிங்' விஷயம் இன்ஸ்பெக்டர்க்குத் தெரிஞ்சா அவர் கோபப்படலாமே?"

"போன் பண்றது நாமதான்னு தெரியாதபடிக்கு பேசுவோம்" சொன்ன உதயகுமார் டைரக்டரியைப் புரட்டி - பி-ஸிக்ஸ் ஸ்டேஷனின் டெலிபோன் எண்ணைக் கண்டுபிடித்து டயலைச் சுற்றினான்.

ரிங் போய் ரிஸீவரை யாரோ எடுத்தார்கள்.

"ஹலோ.. பி-ஸிக்ஸ் போலீஸ் ஸ்டேஷன்..."

"எஸ்.."

"சப்-இன்ஸ்பெக்டர் தியாகராஜன் இருக்காரா?"

"நீங்க யார் பேசறது?"

"அவரோட ஃப்ரெண்ட்.."

"லைன்ல இருங்க. பேசச் சொல்றேன்.." குரல் கேட்டு மௌனமான அடுத்த சில விநாடிகளில் ரிஸீவரைச் சாத்தினான் உதயகுமார்.

"நிஜமான போலீஸ்தான்.."

வித்யா தளர்ந்து போய் - சுவர்க்கு சாய்ந்து கொண்டாள். "இது பிரச்னையோட ஆரம்பமா.. முடிவான்னு தெரியலை.."



"போலீஸ் பணத்தை வாங்கிக்கிட்டா கடைசி வரைக்கும் நமக்குப் பக்க பலமா இருப்பாங்கன்னு நினைக்கிறேன்..." உதயகுமார் பக்கத்திலிருந்த ப்ரிட்ஜைத் திறந்து - ஐஸ் வாட்டர் பாட்டிலை எடுத்து - காய்ந்து போன தொண்டைக்கும் - வயிற்றுக்கும் வார்த்தான்.

திடும்மென்று தூக்கத்தில் விழித்துக் கொண்ட குழந்தை மாதிரி டெலிபோன் அலறியது.

வித்யா எழுந்து போய் ரிஸீவரை எடுத்தாள்.

"ஹலோ.."

"உதயகுமார் இருக்காரா?" ஒரு ஆண் குரல் கேட்டது.

"இருக்கார்.. நீங்க யாரு..?"

"வனிதாவுக்கு வேண்டாதவன்.."

"வனிதாவுக்கு வேண்டாதவன்...? யார் அது வனிதா..?"

"உனக்கும்... உம் புருஷனுக்கும் தெரிஞ்சவன்."

"தெரிஞ்சவனா? என்ன உளர்றே...?"

"உங்க வீட்டு பாத்ரூம்ல... செத்துக் கிடந்தவதான் வனிதா.."

## 7

வித்யாவுக்குள் கோபம் 'விருட்'டென்று ஏறியது.

"யார்ரா..நீ...? எதுக்காக ஒரு பெண்ணைக் கொலை பண்ணி எங்க வீட்டு பாத்ரூம்ல கொண்டு வந்து போட்டு - போலீஸ்ல எங்களை மாட்டி வைக்கப் பார்த்தே.."

''ஆஹ்ஹா..! அந்தக் காலத்து தமிழ் படத்துல கண்ணம்பாள் நீளமா.. ஆக்ரோஷமா... வசனம் பேசற மாதிரி பேசறியே?''

உதயகுமார் வித்யாவுக்குப் பக்கத்தில் வந்து நின்று ரிஸீவரை வாங்க கையை நீட்டிக் கொண்டே கேட்டான்.

''போன்ல யாரு வித்யா?''

''அந்தப் பொண்ணைக் கொலை செஞ்ச பாவிங்க..''

ரிஸீவரை வாங்கி ''ஹலோ'' என்றான் உதயகுமார்.

''என்ன உதயகுமார்... சௌக்கியமா?''

''யாருடா..நீ?''

''உன் பொண்டாட்டிக்கிட்டேயே சொன்னேனே? உனக்கும் அந்த வனிதாவுக்கும் வேண்டாதவன். எனக்கு வேண்டாத வனிதாவை உன் வீட்டு பாத்ரூம்ல பிணமாக்கி - உன் கூட கொஞ்சம் விளையாடிப் பார்க்கப் போகிறவன்... எனக்கொரு பேரை நீயே வெச்சுக்கலாம். பழனிச்சாமி...? பஷீர்...? பெர்னாண்டஸ்...? உனக்கு எந்த மதம் பிடிக்குமோ... அதுல ஒரு பேரை செலக்ட் பண்ணி வெச்சுக்கலாம்..''

''எதுக்காக இந்த விபரீத விளையாட்டு... உனக்கு நான் என்ன பண்ணினேன்... நீ வீனஸ் நாகராஜனோட ஆளா..?''

''ஸாரி... நான் உன்னோட பிஸினஸ் எதிரியில்லே..''

''பின்னே..?''

''சொல்ல விரும்பலை..! நான் இப்ப உனக்குப் போன் பண்ணினது வேற விஷயமா..! இன்ஸ்பெக்டர்கிட்டே ரொம்ப நேரமா பேசிட்டிருந்தே...? அந்த விவரம் எனக்கு என்னான்னு தெரியணும்..''

''உனக்குத் தெரிய வேண்டிய அவசியமில்லை.''



''நீயும் உன்னோட பொண்டாட்டியும் லாக்கப்பில் இருக்க வேண்டியவங்க... இன்னமும் வீட்லேயே இருக்கீங்களே... இன்ஸ்பெக்டரை உன் பணத்தைக் காட்டி சரிக்கட்டிட்டியா?''

''.....''

''என்ன பேச்சையே காணோம்... நான் சொன்னது சரிதானே? இதோ பார் உதயகுமார்... அந்த இன்ஸ்பெக்டரை நீ சரிக்கட்டினாலும் சரி... உன்னால.. நான் போட்ட வியூகத்திலிருந்து தப்பிக்கவே முடியாது. நீ கோலத்துக்குள்ளே பூந்தா அதுக்கும் கீழே நான் பூந்து வெளியே வருவேன்..''

''பாவி! நீ யார்ரா..?''

''பாவி நானில்லை. நீதான்... நீ எப்பவோ பண்ணின பாவம்தான் இப்ப மூட்டை கட்டிகிட்டு வந்து உன் வீட்டு வாசல்ல நின்னுட்டிருக்கு..''

''ராஸ்கல்! உன்னால என்ன பண்ண முடியுமோ பண்ணுடா...'' ரிஸீவரை ஓங்கி சாத்தினான் உதயகுமார்.

## 8

உற்சாகமில்லாமல் விடிந்தது மறுநாள் காலைப் பொழுது. ராத்திரி முழுவதும் சரியாகத் தூங்காததால் வித்யாவுக்கும் - உதயகுமாருக்கும் கண்களில் எரிச்சலும் உடம்பில் தளர்ச்சியும் இருந்தது. வித்யா சமையலறைக்குள் நுழைந்து - காபி தயாரித்துக் கொண்டு - உதயகுமாரை நெருங்கினாள். போர்வைக்குள்ளிருந்த அவனை எழுப்பும் போது - நெற்றி சுட்டது.

''என்னங்க உடம்பு சுடுது...?''

''பயத்திலேயும்... டென்ஷன்லேயும்... ஏற்பட்ட காய்ச்சல்தான்.''

''தைரியமாயிருங்க... அந்த இன்ஸ்பெக்டர்தான் இந்தப் பிரச்சினையிலிருந்து நம்ம ரெண்டு பேரையும்... மீட்கப் போறதாச் சொல்லியிருக்காரே...?''

''எதிரி போலீஸைக் காட்டிலும் தீவிரமா இருக்கானே... அவன் எவ்வளவு தைரியமா போன் பண்ணி மிரட்டறான்... பார்த்தியா...?''

''குரலை வெச்சு அவனை யார்ன்னு உங்களாலே கண்டுபிடிக்க முடியலையா...?''

''ராத்திரி பூராவும் எனக்கு அதே யோசனைதான். போன்ல பேசினவன் குரலை வேணுமின்னே மாத்தி பேசினான். அதான் என்னால கண்டு பிடிக்க முடியலை...''

''இன்னொருதரம் அவன் போன்ல பேசினா உங்களாலே குரலை ஐடென்டிஃபை பண்ண முடியுமா...?''

''உன்னிப்பா கவனிக்கணும்...''

''இன்ஸ்பெக்டர்க்கு... இன்னிக்குப் பணம் தரணும்... பாங்குக்குப் போய் பணம் மாத்திகிட்டு... நானே... சதர்ன் ஹோட்டலுக்குப் போய் குடுத்துடட்டுமா...?''

''நீ போறியா...?''

''ஆமா... உங்களுக்குத்தான் உடம்பு சுடுதே... பேசாம ரெஸ்ட் எடுத்துக்குங்க...'

''உன்னால முடியுமா...?

''ஏன் முடியாது... சரியா பத்து மணிக்கே கிளம்பி - பாங்குக்குப் போய் பணத்தை ட்ராப் பண்ணிகிட்டு ஹோட்டல் சதர்ன்க்குப் போய் - அங்கே காத்திட்டிருக்கிற இன்ஸ்பெக்டர்க்கு குடுத்துட்டு வந்துடறேன்...''



வித்யா சொல்லிக் கொண்டிருக்கும் போதே - டெலிபோன் அடித்தது. 'நீயே எடுத்துப் பேசு' என்பது போல் கண்ணைக் காட்டினான் உதயகுமார்.

வித்யா ரிஸீவரை எடுத்தாள்.

''ஹலோ..''

''குட்மார்னிங் மிஸஸ் வித்யா. நான் இன்ஸ்பெக்டர்...''

''குட்மார்னிங் ஸார்... இப்பத்தான் உங்களைப் பத்தி பேசிக்கிட்டிருந்தோம்..''

''என்ன விஷயம்...?''

''உங்களுக்கு கொடுக்க வேண்டிய பணத்தைப் பற்றித்தான்..''

'உங்க ரெண்டு பேர்ல யார் பணத்தைக் கொண்டு வந்து குடுக்கப் போறீங்க...?''

'நான்தான். அவர்க்கு லேசா ஃபீவர்..''

''எத்தனை மணிக்கு வர்றீங்க...?''

''பாங்குக்குப் போயிட்டு... சரியா பத்தரை மணிக்கெல்லாம் ஹோட்டலுக்கு வந்துடுவேன்... நீங்க ரிசப்ஷன்ல இருப்பீங்களா...? ரெஸ்டாரெண்ட்ல இருப்பீங்களா?''

''ரெஸ்டாரெண்ட்...''

''நீங்க மட்டும் வருவீங்களா...? இல்லே சப்-இன்ஸ்பெக்டரும் வருவாரா...?''

''நான் மட்டும்தான்...''

''உங்க கிட்டே ஒரு விஷயம் சொல்லணும். நேத்திக்கு ராத்திரி யாரோ ஒருத்தன் போன் பண்ணி - என் கணவரை மிரட்டினான்...''

''எதையும் போன்ல பேச வேண்டாம்... ஹோட்டல் ரெஸ்டாரெண்ட்ல வச்சுப் பேசிக்குவோம்... சரியா பத்தரை மணிக்கு வந்துடுங்க... லேட் பண்ணிட வேண்டாம்...''

"லேட் ஆகவே ஆகாது..."

"தாங்க்யூ... மத்ததை அங்கே பேசிக்குவோம்..."

பத்து மணிக்கெல்லாம் பாங்கில் இருந்தாள் வித்யா. செக்கை கொடுத்து விட்டு கேஷ் வாங்க நாற்காலியில் சாய்ந்திருந்தபோது - மானேஜர் அவளிடம் ஒரு ஸ்நேகப் புன்னகையோடு வந்தார். "மிஸ்டர் உதயகுமார் ஊர்ல இல்லையா மேடம்?"

"ஊர்லதான் இருக்கார். ஹி... ஈஸ்... நாட் வெல்... அதான், கேஷ் வாங்கிட்டுப் போக நான் வந்தேன்."

"ஏதாவது கூல்ட்ரிங்க் சாப்பிடறீங்களா?"

"வேண்டாம், தாங்க்ஸ்..."

"டோக்கனைக் குடுங்க, கேஷ் நான் வாங்கித் தர்றேன். என்ன டினாமினேஷன் வேணும்... ஹண்ட்ரட்ஸ் ஆர் பிஃப்டீஸ்...?"

"ஹண்ட்ரட்ஸ்.."

"எப்பவுமே 'பே' டே அன்னிக்குத்தான் மிஸ்டர் உதயகுமார் இவ்வளவு கேஷை ட்ரா பண்ணுவார்.. இன்னிக்கு ஏதாவது திங்க்ஸ் வாங்கப் போறீங்களா..?"

"ஒரு லேண்ட் பர்சேஸ்... அதுக்கு அட்வான்ஸ் குடுக்கத்தான்.."

"குட் திங்க்..." மானேஜர் சிரித்துக் கொண்டே போய் நூறு ரூபாய் கட்டுகளாக கொண்டு வந்து அவளுடைய கைகளில் திணித்தார். வித்யா பணத்தை ப்ரீப் கேஸில் அடுக்கிக் கொண்டு - மானேஜரிடம் விடை பெற்று வெளியே வந்தாள்.

காரில் கிளம்பி ஹோட்டலை அடைந்தபோது நேரம் 10.25. ரிசப்ஷன் ஹாலைக் கடந்து - இடது பக்கமாய்த் தெரிந்த ரெஸ்டாரெண்ட்க்குள் நுழைந்தாள்.

ரெஸ்டாரெண்டில் கூட்டம் அவ்வளவாக இல்லை... அவ்வளவு பெரிய ஹாலில் நான்கைந்து பேர்கள் மட்டும் உட்கார்ந்து - ஸாண்ட்விச்சையும் ஆம்லெட்டையும் மென்று கொண்டிருந்தார்கள்.



வித்யா சூட்கேஸை மடியில் வைத்துக் கொண்டு ஒரு மூலையோர டேபிளில் உட்கார்ந்திருந்தாள்.

'இன்ஸ்பெக்டர் எந்த நிமிஷமும் வரலாம்... பணத்தைக் கொடுத்ததும்... உடனே கிளம்பிட வேண்டியதுதான்.'

காத்திருந்தாள்.

வெயிட்டர் பக்கத்தில் வந்து நின்றான்.

"ஒரு காபி..."

அவன் நகர்ந்து போனதும் - வாட்சைப் பார்த்தாள் வித்யா.

மணி 10.27.

ரெஸ்டாரெண்டின் அமைதியான சூழ்நிலை மனசுக்குப் பயமாய் இருந்தது. இருதயம் வேகமான துடிப்பில் - விநாடிகளைக் கழித்துக் கொண்டிருக்க...

காபி வந்தது.

குடித்தாள்.

நேரம் சரியாய் 10.30.

இன்ஸ்பெக்டரைக் காணோம்.

10.35.

10.40.

"ஏதாவது ஹோட்டல் மாறி வந்துவிட்டோமோ...? அவர் சதர்ன் ஹோட்டலைத்தானே சொன்னார்..."

'வெளியே போய் ரிசப்ஷனில் பார்ப்போமா..?'

வித்யா யோசித்து எழ முயன்ற விநாடி -

வெள்ளை பேண்ட் வெள்ளை சர்ட்டில் இன்ஸ்பெக்டர் உள்ளே வந்தார். வேகமான நடையில் அவளை நெருங்கி - எதிரே இருந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

''ஸாரி ஃபார் த டிலே..! நீங்க வந்து [illegible]...?''

''சரியா பத்தரை மணிக்கு வந்துட்டேன்

''கேஷ் எவ்வளவு இருக்கு...?''

''ஸெவண்டி ஃபைவ் [illegible]ஸண்ட்...''

இன்ஸ்பெக்டர் சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு மெல்லிய குரலில் சொன்னார். ''இன்னும் ஒரு தர்ட்டி தௌஸண்ட் நீங்க அதிகமா கொடுக்க வேண்டியிருக்கும் மிஸஸ் வித்யா...''

''எதுக்கு...?''

''அந்தப் பொண்ணோட டெட் பாடியை ரோட்டோரத்துல போட்டு அதை ஒரு அநாதைப் பிணமா ட்ரீட் பண்ணி - மார்ச்சுவரிக்குக் கொண்டு போக - கான்ஸ்டேபிள்களோட உதவி தேவைப்பட்டது. மூணு கான்ஸ்டபிள்களை இதுக்காக சரி பண்ண வேண்டியதாயிடுச்சு.. ஆளுக்கு தலா பத்தாயிரம் தர்றதா சொல்லிட்டேன்... கொடுத்துடலாமா...?''

''அதிகமா பணம் கேட்க மாட்டேன்னு சொன்னீங்க...?''

''சொன்னேன்... வாஸ்தவந்தான்...'' முழங்கைகளை மேஜையின் மேல் ஊன்றிக் கொண்டார் - தொடர்ந்தார். ''ஒரு கொலைக் கேஸை முழுங்கி ஜீரணம் பண்ணறதுன்னால அப்படித்தான்... அப்பப்ப இது மாதிரி சின்னச் சின்னச் சிக்கல் வந்துடும். அந்த சிக்கல்களை உடனுக்குடனே தீர்த்துடறது புத்திசாலித்தனம். மூணு காஸ்டபிள் களோட வாயைச் சாத்தலைன்னா.. விவகாரம் ஏதாவது ஒரு வழியில் போலீஸ் சுப்பீரியர்ஸுக்குப் போயிடும்..''

''ப.. பணம் எப்ப வேணும்..?''

''நாளைக்குக் குடுத்தாக் கூட போதும்..''

''என்னோட கணவரைக் கேட்டுட்டு..''



''தாராளமா..! கேட்டுட்டே குடுங்க.. அவசரமில்லை. பை.. த.. பை... அவர்க்கு உடம்பு எப்படி இருக்கு..?''

''டெம்ப்ரேச்சர் இருக்கு..''

''பயந்துட்டார் போலிருக்கு. பயப்பட வேண்டாம்னு சொல்லுங்க. கேஸை ரெண்டே நாள்ல சுத்தம் பண்ணிடலாம்..''

''விவகாரம் வெளியே வந்துடாதே...''

''வரவே வராது...! ஆமா.. போன்ல் பேசும் போது ஏதோ ஒரு விஷயத்தைச் சொல்றதுக்காக வந்தீங்களே.. என்ன விஷயம் அது...?''

''நேத்திக்கு ராத்திரி எவனோ ஒருத்தன்... போன் பண்ணி அந்தப் பொண்ணை கொலை பண்ணினது நான்தான். கொலைப் பழியிலிருந்து நீயும் உன்னோட மனைவியும் தப்பிக்க முடியாதுன்னு என் கணவரை மிரட்டினான்...''

''அவன் யார்ங்கிறதை உங்க கணவராலே கண்டுபிடிக்க முடியவில்லையா...?''

''முடியலை...''

''சரி.. அவன் யாராகவோ இருந்துட்டுப் போகட்டும்... அதைப் பத்தி நீங்களோ உங்க கணவரோ கவலைப்படவே வேண்டாம்... அவன் கிட்டயிருந்து போன் வந்தா பதிலுக்குப் பதில் பேசிட்டிருக்காம... ரிஸீவரை வெச்சுடுங்க..''

''அவனால எந்த ஆபத்தும் வராதே...?''

''ஆபத்து அவன் மூலமா இனிமே வர வாய்ப்பே இல்லை. ஏன்னா கொலை பண்ணின ஆசாமி தன்னை வெளிப்படுத்திக்க மாட்டான். அவனோட 'எய்ம்' பூராவும் நீங்களும் உங்க கணவரும் இந்தக் கொலைப் பழியில் மாட்டிக்கிட்டு -ஜெயிலுக்குப் போகணுங்கிறதுதான். அவனோட எண்ணத்துக்கு ஒரு பெரிய

குறுக்குச் சுவரைத்தான் நான் எழுப்பிட்டேனே... அவனால என்ன பண்ண முடியும்?"

"உங்க டிபார்ட்மெண்ட்ல இருக்கிற சுப்பீரியர்ஸுக்குப் போன் பண்ணி இந்த விஷயத்தைச் சொல்லிட்டா..?"

"சொல்லட்டுமே...? டிபார்ட்மெண்ட்ல என்னைத்தான் கூப்பிட்டு விசாரிப்பாங்க. அதுமாதிரி எதுவுமே நடக்கலைன்னு சொல்லிடுவேன். டிபார்ட்மெண்ட்ல எனக்கு கொஞ்சம் செல்வாக்கும் இருக்கு... மெட்ராஸ்ல இருக்கிற எம்.எல்.ஏ.க்களில் மூணு பேர் எனக்கு நெருக்கம்.. எந்த விஷயத்தையும் சாதிக்கலாம்.

வித்யா கொஞ்சம் முகத் தெளிவோடு எழுந்தாள். "அப்ப நான் புறப்படலாமா...?"

"ம்... அந்த முப்பதாயிரத்தை எப்ப தர்றீங்க..?"

"என் கணவர்கிட்டே பேசிட்டு.. சொல்றேனே..?"

"எதுல வந்தீங்க.. காரா?"

"ஆமா..."

"நீங்க போங்க..! நான் பத்து நிமிஷம் இருந்து காபி சாப்பிட்டுட்டு வர்றேன்.."

ரெஸ்டாரெண்டை விட்டு வெளியே வந்தாள் வித்யா. மனதிலிருந்த படபடப்பு கொஞ்சம் குறைந்திருந்தது. ஆனால் கான்ஸ்டபிள்களுக்காக கேட்ட முப்பதாயிரம் மட்டும் கொஞ்சம் நெருடலாய் இருந்தது.

'இந்தப் பணப்பறிப்பு நிற்குமா..?'

'இல்லை இதற்கு மேலும் தொடருமா...?'

யோசித்துக் கொண்டே ஹோட்டலின் கார் பார்க்கிங்கைத் தொட்டு, தன் காரை நெருங்கியவள் - ஆச்சரியப்பட்டாள்.



காரின் முன் சீட்டில் -

ட்ரைவிங் ஸ்தானத்தில் - இளம் ரோஸ் நிறக் கவர் ஒன்று பளிச்சென்று கண்ணில் பட்டது. சுவரை எடுத்தாள்.

மேற்பரப்பில் டைப் அடித்த வாசகங்கள் தெரிந்தன. மிஸஸ் அண்ட் மிஸ்டர் உதயகுமார் அவர்களின் கனிவான பார்வைக்காக.

வித்யா சட்டென்று தலையை உயர்த்தி சுற்றும் முற்றும் பார்த்தாள். அவள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே - ஹோட்டலின் காம்பௌண்ட் கேட்டுக்கு வெளியே - பைக்கில் உட்கார்ந்திருந்த ஒருவன் அவசரமாய் கிக்கரை உதைத்து - பைக்கை விரட்டினான்.

'யாரவன்...?'

வித்யா சட்டென்று காருக்குள் பாய்ந்து -அதன் என்ஜினை உசுப்பி - விசுக்கென்று விரட்டி - பத்து விநாடிகள் முடிவதற்குள் காம்பௌண்ட் கேட்டுக்கு வெளியே வந்தாள்.

நீளமான ரோட்டின் தொலைவில் அந்த பைக் போய்க் கொண்டிருந்தது. வித்யா விரட்ட ஆரம்பித்தாள்.

பைக் இப்போது ஒரு வளைவில் திரும்பிக் கொண்டிருந்தது. அசுர வேகம். 'அவனைப் பிடிக்க முடியுமா...?'

கார் சில விநாடிகளுக்குப் பின் வளைவைத் தொட்டபோது அந்த சந்திப்பில் நான்கு ரோடுகள் பிரிய - வித்யா குழப்பமானாள்.

'பைக் எந்த ரோட்டில் திரும்பியிருக்கும்...?'

'ரோட்டோரத்தில் இளநீர் காய்களை குவித்து வைத்து - கையில் அரிவாளோடு உட்கார்ந்திருந்த - முண்டாசு கட்டின நபரிடம் காரைக் கொண்டு போய் நிறுத்திக் கேட்டாள் வித்யா.

"இந்தப் பக்கமா ஒரு பைக் வந்ததே...? அது எந்த ரோட்ல திரும்பிப் போச்சு...?"

''ஸ்பீடா ஒரு பைக் போச்சே... அதுவா..?''

''ஆமா..''

''சோத்துக்கைப் பக்கம்தான் திரும்பி போச்சும்மா..''

வலது கைப் பக்கம் காரைத் திருப்பினாள் வித்யா. ஆக்ஸிலேட்டரை அழுத்தி வேகம் பிடித்தாள்.

ரோடு வெறிச்சிட்டு - கார்க்குப் பின்னால் ஓடியது. எந்த வாகனமும் தட்டுப்படவில்லை.

இனிமேல் அந்த பைக்காரனை பிடிப்பது சிரமம். நான்கைந்து கிலோ மீட்டர் வரை - காரை விரட்டிப் பார்த்துவிட்டு - வீட்டை நோக்கித் திருப்பினாள்.

வீட்டு வாசலில் -

உதயகுமார் கவலையோடு காத்திருந்தான்.

## 9

**கா**ர் போர்ட்டிகோவில் வந்து நின்றதும் - உதயகுமார் வேக நடையில் வித்யாவை நெருங்கினான். ''ஏன்.. வித்யா.. இவ்வளவு நேரம்..?''

''இன்ஸ்பெக்டர் வர லேட்...''

காரினின்றும் கீழே இறங்கினான்.

''பணத்தைக் குடுத்துட்டியா?''

''ம்...''

''என்ன சொன்னார்...?''



''உள்ளே போய்ப் பேசலாம் வாங்க..''

''கையில் என்ன கவர்..?''

''வாங்க சொல்றேன்..''

இருவரும் வீட்டுக்குள் நுழைந்தார்கள். வித்யா கணவனை சோபாவில் உட்கார வைத்து - பக்கத்தில் தானும் உட்கார்ந்து - எல்லாவற்றையும் சொல்லி முடித்து விட்டு கவரைப் பிரித்தாள்.

உள்ளே நான்கு கலர் போட்டோக்களும் - டைப் அடிக்கப்பட்ட ஒரு கடிதமும் இருந்தது.

வித்யா கடிதத்தை வாய்விட்டே படித்தாள்.

**'கொலைகாரத் தம்பதிகளுக்கு...**

**ஒரு கொலையைச் செய்துவிட்டு - போலீஸின் பிடியிலிருந்து தப்பிவிட முயல்வது அவ்வளவு சுலபமில்லை. வனிதாவைக் கொலை செய்த உங்களை - இன்ஸ்பெக்டர் கைது செய்யாதது எனக்கு ஆச்சர்யமே..! இன்ஸ்பெக்டரை நீ பணத்தால் சரிக்கட்டியிருப்பாய் என்று நினைக்கிறேன். நீ போலீஸில் மாட்டிக் கொள்ள வேண்டும் என்பதுதான் என் முந்தைய ஆசை. அந்த ஆசை இப்போது இல்லை. நான் நினைத்தால் போலீஸ் டிபார்ட்மெண்டின் மேலதிகாரிகளுக்குத் தகவல் கொடுத்து - கைவசம் அனுப்பியுள்ள போட்டோக் களையும் காட்டி - உனக்குப் பிரச்சனையை உண்டாக்க முடியும். ஆனால் அப்படிச் செய்ய நான் விரும்பவில்லை. என் உதடுகள் மௌனம் சாதிக்க வேண்டுமென்றால் - உன்னிடம் இருக்கும் பணம் என்னிடம் பேச வேண்டும்.''**

படிப்பதை நிறுத்தி விட்டு - போட்டோக்களைப் பார்த்தாள் வித்யா.

அவள் வீட்டின் குளியலறைப் படம், ரத்தக்கறை சுவர்கள், பாத் டப்பில் அந்தப் பெண்ணின் பிணம்...

உதயகுமார் கலவரமானான். ''ராஸ்கல்! எல்லாமே ஒரு முன்னேற்பாட்டோடு பண்ணியிருக்கான்.''

''இந்தப் போட்டோக்களை வெச்சுட்டு அவனால என்னங்க பண்ண முடியும்..! போலீஸுக்குப் போனா நம்புவாங்களா?''

''நம்புவாங்களோ இல்லையோ.. பிரச்சனை தானே...! வீட்டுக்கு வருவாங்க. விசாரணை பண்ணுவாங்க. நாம எல்லாத்தையும் சொல்ல வேண்டியிருக்கும். இது 'செட்டப்'ன்னு சொன்னாலும் - கேஸை கோர்ட்டுக்குக் கொண்டு போய்த்தான் முடிவு பண்ணுவாங்க..''

''இந்த லெட்டர்படி பார்த்தா... இவனும் பணத்தை எதிர்பார்க்கிறான்! இப்ப என்னங்க பண்ணலாம்..?''

''உழைச்சு சம்பாதிச்ச காசு... ஆயிரக்கணக்கா.. இன்ஸ்பெக்டர்க்கும், கொலைகாரப் பயலுக்கும் கொடுக்க வேண்டியிருக்கு... இந்தப் பக்கம் இன்ஸ்பெக்டர் தொல்லை, அந்தப் பக்கம் முகம் தெரியாத கொலைகாரன் தொல்லை...''

உதயகுமார் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கும் போதே - சற்றுத் தள்ளியிருந்த டெலிபோன் கூப்பிட்டது.

''போன் மணி அடிச்சாலே... உடம்புல இருக்கிற நரம்பெல்லாம் சுளீர்ன்னு மடங்குது... யார்ன்னு பாரு வித்யா..''

''அந்தக் கொலைகாரனா இருப்பானோ..?''

''இருந்தா என்ன...? தலைக்கு மேலே வெள்ளம் போயாச்சு.. இவனும் பணத்துக்கு அலைகிற கேஸ்தான், தைரியமா எடுத்துப் பேசு..''

வித்யா போய் ரிஸீவரை எடுத்தாள்.

''ஹலோ..''

''என்ன... நீயும்... உன் புருஷனும் லெட்டர் படிச்சீங்களா..?''



''படிச்சோம்...''

''போட்டோஸ்...?''

''பார்த்தோம்..''

''உன் புருஷனைக் காட்டிலும் நீ தைரியமாகவே இருக்கே... என்னைப் பிடிக்கிறதுக்காக கார்ல என்ன விரட்டு விரட்டினே..?''

''நாங்க உனக்கு என்ன பண்ணினோம்...? எதுக்காக எங்களை இப்படி வேண்டாத பிரச்சினையில் மாட்டிவிட்டு - இம்சைப் படுத்தறே..''

''வாழ்க்கையோட தத்துவம் என்ன தெரியுமா...? இன்பமும் துன்பமும் மாறி மாறி வர்றதுதான் வாழ்க்கை... இப்ப உங்க ரெண்டு பேர்க்கும் துன்பம்... அந்தத் துன்பமும் தற்காலிகமானதுதான். உன் புருஷன் நினைச்சா... இந்தத் துன்பத்தையும் இல்லாமே பண்ணிக்கலாம்... ஆனா அதுக்காக கொடுக்க வேண்டிய விலை... கொஞ்சம் அதிகமா இருக்கும்..''

''உன்னோட விலை என்ன...?''

''கொஞ்சம் காஸ்ட்லி..''

''எவ்வளவு...?''

''ரெண்டு லட்சம்..''

''என்னது.. ரெண்டு லட்சமா...?'' வித்யா அதிர்ந்து போய் கேட்டுக் கொண்டிருக்கும் போதே - உதயகுமார் எழுந்து வந்து ரிஸீவரை வாங்கினான். கோபமாய் கத்தினான். ''டேய்... யார்ரா...நீ? தைரியமிருந்தா எம் முன்னாடி வாடா..''

''முட்டாள்...! நேர்ல வந்து.. உம் முன்னாடி உட்கார்ந்து பேரம் பேச நீ என்ன வைர வியாபரமா பண்ணிட்டிருக்க...? இது ஒரு நிழல் வியாபாரம் உதயகுமார்... உன்னோட பெண்டாட்டிக்கு இருக்கிற தைரியம் கூட உனக்கு இல்லை.''

"டேய்! உனக்கு வேண்டியது பணம்தானே..?"

"ஆமா..ஆமா.."

"எவ்வளவு..?"

"ரெண்டு லட்சம்தான்.."

"அவ்வளவு பணம் என்கிட்டே இல்லை.."

"என்னது பணம் உங்கிட்டே இல்லையா..! கார் இருக்கு.. அழகான குட்டி பங்களா இருக்கு.. மெஷின் டூல்ஸ் தயாரிக்கிற ஃபேக்டரி வெச்சிருக்கே... ரெண்டு லட்சம்ங்கிறது உன்னைப் பொறுத்தவரைக்கும்.. ரெண்டாயிரம் மாதிரிதான்."

"அதெல்லாம்... ஆறு மாசத்துக்கு முந்தி.. இப்ப பிசினஸ் சரியில்லை. வீட்டு பேர்ல.. கார் பேர்ல கடன் இருக்கு... பாங்க்ல பணம் கிடையாது."

"பொய்.."

"நிஜமாத்தான் சொல்றேன்.."

"நான் நம்ப மாட்டேன். எனக்கு வேண்டியது பணம். இன்னும் ஒரு மணி நேரம் கழிச்சு உனக்குப் போன் பண்ணுவேன். உன்னோட பதில் எனக்குச் சாதகமாக இருக்கணும்... இல்லே... நடக்கப் போகிற சம்பவங்கள் உனக்குப் பாதகமாகத்தான் இருக்கும். நீயும் உன்னோட அழகான பெண்டாட்டியும் உட்கார்ந்து யோசனை பண்ணுங்க.." ரிஸீவர் மறுமுனையில் 'த்தட்' என்று வைக்கப்பட்டது.

உதயகுமார் ரிஸீவரை வைக்கக் கூட தோன்றாமல் அப்படியே தளர்ந்து போய் உட்கார்ந்தான். வித்யா அவன் கைகளிலிருந்த ரிஸீவரை வாங்கி அமர்த்தி விட்டு பக்கத்தில் அமர்ந்தாள்.

"என்னங்க..?"

"ம்..."



"அவனுக்கும் பணத்தைக் கொடுத்து வாயைச் சாத்த வேண்டியதுதான்.."

"எப்படி முடியும் வித்யா...? ரெண்டு லட்சம் கேட்கிறானே...? இவ்வளவு பணம் இப்ப நம்மகிட்டே ஏது...? வீட்டு மேலே கடன்.. பாக்டரி மேல கடன்.. இந்தக் கடனெல்லாம் வெளியே தெரியாத படிக்கு, அந்தஸ்து குறையாம பிசினஸ் பண்ணிட்டிருந்தோம்... பேங்க்ல ஃபாக்டரியோட பணம் ஒன்றரை லட்சம் இருந்தது. அதுல.. எழுபத்தஞ்சாயிரத்தை எடுத்து - இன்ஸ்பெக்டர்க்கு குடுத்துட்டோம்.. இன்னும் மூணு கான்ஸ்டபிள்ஸுக்கு முப்பதாயிரம் ரூபா தரணும். மீதி கையில் இருக்கிற பணம் நாப்பத்தஞ்சாயிரம் தான்! ரெண்டு லட்சத்துக்கு எங்கே போறதாம்?"

"மறுபடியும் அவன் போன் பண்ணினா.. பணம் நாற்பதாயிரமும் கொஞ்சம் நகைகளும் தர்றோம்ன்னு சொல்லிப் பாருங்களேன்.."

"அவனுக்கு... ஒரு பைசா கூட குடுக்கக் கூடாது வித்யா.."

"அவன் விடுவானா..?"

"இந்த விஷயத்தைச் சமாளிக்க இன்ஸ்பெக்டர்கிட்டே உதவி கேட்க வேண்டியதுதான்..."

"அவர் உதவுவாரா?"

"கேட்டுப் பார்க்கலாம்.." சொன்ன உதயகுமார் எழுந்து ரிஸீவரை எடுத்து டயலைச் சுழற்றிவிட்டு கேட்டான்.

"போலீஸ் ஸ்டேஷன்.."

"....."

"இன்ஸ்பெக்டர் நான் உதயகுமார்.."

"....."

"ஒரு பத்து நிமிஷம் என் வீட்டுக்கு வந்துட்டுப் போக முடியுமா?"

''.....''

''விஷயத்தை நேர்லதான் சொல்லணும்..''

''.....''

''ப்ளீஸ்! வாங்க இன்ஸ்பெக்டர் பத்தே நிமிஷம் தான்!''

''.....''

''தாங்க்யூ... உங்களுக்காக வெயிட் பண்ணிட்டிருக்கேன்..'' ரிஸீவரை வைத்துவிட்டு - வித்யாவிடம் திரும்பினான் உதயகுமார், ''இன்ஸ்பெக்டருக்கு வீட்டுக்கு வரவே இஷ்டமில்லை. வேண்டா வெறுப்பா பேசினார். பணம் வாங்கற வரைக்கும் குழைஞ்சார்... இப்ப.. ஆளையே தெரியாத மாதிரி பேசறார்..''

''வர்றேன்னாரா?''

''இன்னும் ஒரு மணி நேரத்துல வர்றாராம்..''

''அவர் கிட்டே என்ன உதவி கேக்கப் போறீங்க..?''

''இந்தக் கொலைகாரனை மொதல்ல அமுக்கச் சொல்லணும்..''

காத்திருந்தார்கள்.

இன்ஸ்பெக்டர் ஒரு மணி நேரம் கழித்து - யூனிஃபார்மில் வந்து பைக்கில் இறங்கினார். அமர்த்தலாய் உள்ளே வந்தவர் - கடுகடுப்பாய் முகத்தை வைத்துக் கொண்டு கேட்டார்.

''என்ன விஷயம்?''

''வந்து.. அந்த ஆசாமி மறுபடியும் போன் பண்ணியிருந்தான்..''

''யாரு...?''

''தட் மர்டரர்..''



''அவனை இக்னோர் பண்ணுங்க...! போன்ல அவன் குரல் கேட்டதும் ரிஸீவரை வெச்சுடுங்க..''

''இந்த போட்டோக்களையும் லெட்டரையும் பாருங்க ஸார்..''

இன்ஸ்பெக்டர் பார்த்துவிட்டு - கன்னத்தைச் சொறிந்தார். ''எல்லாமே திட்டம் போட்டு... ப்ரீ காஷனரி ஸ்டெப்ஸ் எடுத்துக் காரியம் பண்ணியிருக்கான். இவன் பழைய கிரிமினல் பேர்வழியாக் கூட இருக்கலாம். இவனோட டிமாண்ட் என்ன? பணம் தானே...?''

''ஆமா..''

''குடுத்துடுங்க..''

''ரெண்டு லட்சம் கேக்கிறானே...?''

''பாப்ரே..!'' என்று அதிர்ச்சி காட்டினார் இன்ஸ்பெக்டர். உதயகுமார் தொடர்ந்தான். ''இன்ஸ்பெக்டர்! நாங்க செய்யாத ஒரு கொலைக்காக ரெண்டு பக்கமிருந்தும் கஷ்டத்தை அனுபவிச்சுக் கிட்டு இருக்கோம். ஒரு பக்கம் நீங்க பணம் கேக்கறீங்க... இன்னொரு பக்கம் அவன் பணத்துக்காக டிமாண்ட் பண்ண ஆரம்பிச் சிருக்கான்... அந்த ஆசாமியை நீங்க எப்படியாவது பிடிக்கணும்... இன்ஸ்பெக்டர்..''

இன்ஸ்பெக்டர் புன்னகைத்தார்.

''பிடிச்சா பிரச்னை தீர்ந்துடாது... அதுக்குப் பின்னாடி தான் அது பூதாகரமாக உருவெடுக்கும்..''

இருவரும் திகைக்க இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார். ''எப்படின்னு கேக்கறீங்களா...? கொலையாளியைப் பிடிச்சா... அவன் நான் கொலை செய்யலைன்னுதான் சொல்லுவான். பாடி உங்க வீட்டு குளியலறையில் இருந்திருக்கு. பாடியை டிஸ்போஸ் பண்ண.. நீங்க ரெண்டு பேரும் முயற்சித்தது ஒரு பெரிய குற்றம்.. கேஸ்... கோர்ட்டுக்குப் போனா.. சாட்சிகளும் தடயங்களும் உங்களுக்குப்

பாதகமா இருந்தா.. ஆயுள் தண்டனை வரைக்கும் கிடைக்கலாம். அடிஷனலா இன்னொரு விஷயம்... கோர்ட்டில் நானும் உங்களுக்கு எதிராத்தான் சாட்சி சொல்ல வேண்டியிருக்கும்.."

உதயகுமாரும், வித்யாவும் நொறுங்கிப் போய் உட்கார்ந்தார்கள்.

"இ.. இன்ஸ்பெக்டர்.."

அவர் தொப்பியைக் கழற்றினார். "ஸாரி உதயகுமார்..! உங்களை போன் மூலமா மிரட்டற அந்த எக்ஸை சரிக்கட்ட வேண்டியது உங்க பொறுப்பு.. இதுல நான் தலையிட்டா... விவகாரம் விஸ்வரூபம் எடுத்துடும்... ஹேண்டில் த மேட்டர்.. வித் சாஃப்ட் வேர்ட்ஸ்... அவன் கிட்டே பேரம் பேசிப்பாருங்க.. உங்க பைனான்சியல் பொஸிஷனை எடுத்துச் சொல்லி ஒரு அமௌண்ட்டுக்கு அவனை ஒப்புக்க வையுங்க.."

"அவன் ஒத்துக்கலைன்னா..?"

"ஒத்துக்குவான்.."

"எப்படிச் சொல்றீங்க..?"

"அவனோட நோக்கம் பணம்ன்னு ஆன பின்னாடி... எந்தத் தொகையையும் வாங்கிக்குவான்.."

இன்ஸ்பெக்டர் எழுந்து கொண்டார். வாசலை நோக்கி இரண்டடி நடந்தவர் நின்றார். "கான்ஸ்டபிள்களுக்கு தர வேண்டிய பணம் எப்ப கிடைக்கும்..?"

"நாளைக்கு.."

"அதுக்கும் ஏதாவது காரணம் சொல்லி - பணம் இல்லைன்னு கையை விரிச்சுடாதீங்க.. கான்ஸ்டபிள்கள் வாயைத் தொறந்துட்டா.. உங்களோடு சேர்ந்து நானும் உள்ளே போக வேண்டி வந்துடும். ஆனா... என்னைக் காப்பாத்திக்க நான் எந்தப் பொய்யையும் சொல்லத் தயாராயிருப்பேன்.."



சொன்ன இன்ஸ்பெக்டர் - தலைக்குத் தொப்பியைக் கொடுத்துக் கொண்டே வாசலில் நின்றிருந்த பைக்கை நோக்கிப் போனார்.

## 10

சரியாய் ஒரு மணி நேரம் கழித்து - டெலிபோன் கத்தியது.

உதயகுமார் வித்யாவைப் பார்க்க - அவள் போய் ரிஸீவரை எடுத்தாள். "ஹலோ.."

"தாய்க்குலமா..? வணக்கம்.."

"..."

ரிஸீவரின் வாயைப் பொத்திக் கொண்டே வித்யா தன் கணவனிடம் திரும்பி, "அவன்தாங்க" என்றாள்.

"அவன் கிட்டே நீயே பேசிப்பார்.."

ரிஸீவர்க்கு உதட்டைக் கொடுத்தாள் வித்யா.

"ஹலோ.."

"என்ன முடிவு பண்ணியிருக்கான் உன் புருஷன்..."

"நீ கேட்கிற தொகை அதிகம்... அவ்வளவு பணம் எங்கக்கிட்டே இல்லை.."

"என்ன அழகான - அற்புதமான பொய்.."

"நிஜமாத்தான் சொல்றோம்.."

"சரி.. எனக்குப் பணம் வேண்டாம்... பணத்துக்குப் பதிலா வேற எதையாவது கேக்கலாமா..?"

''என்ன கேட்கப் போறே..?''

''வாரத்துக்கு ரெண்டு ராத்திரி என்னோட படுக்கைக்கு நீ வரணும்..''

''த்தூ..!''

''என்ன த்தூ...? நீயும் உன் புருஷனும் எப்பேர்ப்பட்ட ஆபத்துல மாட்டியிருக்கீங்கன்னு ஒரு நிமிஷம் நினைச்சுப் பாரு... 'த்தூ'ன்னு சொல்ல மாட்டே! ஆஹான்னு சந்தோஷப்படுவே... என்ன வர்றியா....? வாரத்துக்கு ரெண்டு நாள் போதும்..''

வித்யாவின் உடம்பு கோபத்திலும் ஆத்திரத்திலும் தன்னிச்சையாய் நடுங்கிக் கொண்டிருக்க... உதயகுமார் எழுந்து வந்து - அவள் கையிலிருந்த ரிஸீவரை வாங்கினான்.

''ஹலோ..''

''வா ப்ரதர்...! என்ன உன் பொண்டாட்டி ஷாக் ஆயிட்டாளா..?''

''நீ கேக்கற பணத்தை எங்களாலே தர முடியாது..''

''நான் பணம் கேக்கலை... ப்ரதர்..''

''பின்னே...?''

''உன் அழகான பொண்டாட்டியை வாரத்துக்கு ரெண்டு நாள் என் படுக்கைக்குக் கூப்பிட்டேன்..''

''யூ.. யூ... ப்ளடி பாஸ்டர்..''

''நிதானம்.. நிதானம்... உன்னோட கோபம் நியாயமானது தான். ஆனா நீ இப்ப இருக்கிற நிலைமைக்கு கோபப்பட்டுப் பிரயோஜனமில்லை. எனக்கு வேண்டியது ரெண்டு லட்ச ரூபாய். அந்தப் பணத்தை உன்னால குடுக்க முடியலைன்னா... பெண்டாட்டியோட உடம்பை வாரத்துக்கு ரெண்டு ராத்திரி வாடகைக்கு விட வேண்டியதுதான். ஒருநாள் அவகாசம்



எடுத்துக்க. யோசி. பணமா...? தாரமா...? முடிவு பண்ணிக்க... நாளைக்கு ராத்திரி எனக்கு ஒரு முடிவைச் சொல்லணும்..''

மறுமுனையில் ரிஸீவர் வைக்கப்பட்டுவிட... ரிஸீவரை வைத்துவிட்டு - எதிரில் இருந்த ஸ்டூலை எட்டி உதைத்தான். அது அவனுடைய வேகத்தைத் தாங்கிக் கொள்ளாமல் - நிலைக் கண்ணாடியின் மேல் மோதி அதை நொறுக்கியது.

## 11

மறுநாள் காலை பதினோரு மணி.

வாசல் பக்கம் காலிங் பெல் அலறும் சத்தம் கேட்டு - நைந்த உடம்போடு எழுந்துபோய் கதவைத் திறந்தாள்.

இன்ஸ்பெக்டரும் - சப் இன்ஸ்பெக்டரும் மஃப்டி டிரஸ்ஸில் நின்றிருந்தார்கள். வித்யாவைப் பார்த்ததும் இன்ஸ்பெக்டர் கடுகடுத்தார்.

''என்னம்மா...? பணம் கொண்டு வர்றதா சொல்லிட்டு வீட்டுக்குள்ளேயே இருந்திட்டீங்க... கான்ஸ்டபிள்களுக்கு பணம் தர வேண்டாமா..?''

''அ.. அவர்க்கு உடம்பு சரியில்லை..'

''பயக் காய்ச்சல்தானே... ஒரு மணி நேரம் வந்துட்டுப் போறதுக்குள்ளே என்னாயிடும்..? கான்ஸ்டபிள்களோட வாயைச் சாத்தலைன்னா நிலைமை என்னாயிடும் தெரியமா?''

உதயகுமார் இருமிக் கொண்டே உள்ளிருந்து வந்தான். ''வாங்க இன்ஸ்பெக்டர்..''

''பணம் வேணும் உதயகுமார்...''

''ஒரு நிமிஷம் உள்ளே வாங்க இன்ஸ்பெக்டர்...''

''என்ன...?''

உள்ளே வந்தார்கள்.

''உட்காருங்க..''

''அதுக்கெல்லாம் நேரமில்லை.. பணத்தைக் குடுங்க. நாங்க போய்க்கிட்டே இருக்கோம். ஏதோ மதிப்பான குடும்பத்தைச் சேர்ந்தவங்க... தெரியாத்தனமா கொலை கேஸ்ல மாட்டிக் கிட்டீங்களேன்னு காப்பத்த வந்தா, பெரிசா... பிகு பண்ணிக்கிறீங்களே..?''

''ஸாரி இன்ஸ்பெக்டர்! அந்த கொலைகாரப் பேர்வழியோட தொந்தரவை எங்களாலே தாங்கிக்க முடியலை..''

''அவனுக்கும் பணத்தைக் குடுத்து சரிக்கட்ட வேண்டியது தானே...? ஒரு கொலைக் கேஸிலிருந்து தப்பிக்கிறதுன்னா சும்மாவா..?''

''அவன் இப்ப பணம் கேக்கலை..?''

''பின்னே...?''

''......''

''சொல்லுங்க என்ன கேக்கிறான்..?''

''வாரத்துக்கு ரெண்டு ராத்திரி அவனுக்கு என் ஒய்ஃப் வேணுமாம்..''

ஒரு விநாடி திகைத்த இன்ஸ்பெக்டர் - மறுவிநாடியே சகஜ நிலைமைக்கு வந்தார். ''பிளாக்மெயில் பண்றவன் நாலையும் தான் கேப்பான். அவனைச் சரிக்கட்டி நம்ம வழிக்கு கொண்டு வர்றதுதான் சாமர்த்தியம்..''



''இன்ஸ்பெக்டர்'' - உதயகுமார் கோபமாய் ஏறிட்டபடி கத்தினான். அவர் புன்னகைத்தார்.

''கோபம் உபயோகப்படாது. ப்ளாக் மெயிலரை சமாளிக்க வேண்டியது உங்க பொறுப்பு. கான்ஸ்டபிள்களோட வாயைச் சாத்த வேண்டியது என்னோட பொறுப்பு. பணத்தை எப்ப தர்றீங்க?''

வித்யா குறுக்கிட்டுச் சொன்னாள்.

''நாளைக்கு..''

''நாளைக்குன்னா..எத்தனை மணிக்கு..?''

''இதே நேரத்துக்கு வாங்க..''

''நாளைக்கும் தவணை சொன்னா.. என்னோட கோபத்தை நீங்க தாங்கிக்க மாட்டீங்க...'' இன்ஸ்பெக்டர் ஆட்காட்டி விரலைக் காட்டி எச்சரித்துவிட்டு போக சப்-இன்ஸ்பெக்டர் பின்தொடர்ந்தார்.

அவர்கள் காம்பௌண்ட் கேட்டைத் தாண்டும் வரை - முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்த உதயகுமார் - கண்கள் சிவக்க - பற்களை நறநறத்தான்.

''ஹார்ட்லஸ் க்ரியேச்சர்ஸ்..''

## 12

**பா**தி தூக்கமும் - பாதி நினைப்புமாய்ப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்த வித்யா பக்கத்து அறையில் மேஜை நகர்த்தப்படும் சத்தம் கேட்டு - திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். பக்கத்தில் படுத்திருந்த உதயகுமாரைக் காணோம். டைம்பீஸில் ராத்திரி மணி 10.30.

'எங்கே போனார்...?'

கட்டிலை விட்டு இறங்கி - பக்கத்து அறைக்குப் போய் - சாத்தியிருந்த கதவைத் தள்ளி எட்டிப் பார்த்தாள்.

அறை இருட்டாய் இருந்தது.

டேபிள் லாம்ப்பை பொருத்திக்கொண்டு - உதயகுமார் வெள்ளைத் தாளில் எதையோ எழுதிக் கொண்டிருந்தான்.

''என்னங்க?''

வித்யா குரல் கொடுக்க - அவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். எழுதிக் கொண்டிருந்த பேப்பரை மறைக்க முயன்றான்.

வித்யா அவனை நெருங்கினாள்.

மேஜையின் மேல் - கண்ணாடி டம்ளர் நிறைய தண்ணீர் அதில் இரண்டு மாத்திரைகள் கரைந்து நீரின் நிறத்தை மாற்றிக் கொண்டிருந்தது.

''இந்நேரத்துக்கு இங்கே வந்து உட்கார்ந்துகிட்டு என்ன பண்ணிட்டிருக்கீங்க?''

''ஒண்ணுமில்லே... வித்யா நீ போய்... தூங்கு.''

'ஒண்ணுமில்லையா...? கையில் என்ன அது லெட்டர்...?''

''அது... வந்து... வந்து...''

''ம்... குடுங்க.. அதை...''

வெடுக்கென்று அவன் கையினின்றும் - அந்த துண்டுக் காகிதத்தைப் பறித்து அதில் எழுதியிருந்த - நான்கு வரிகளைப் படித்ததும் திடுக்கிட்டுப் போனாள்.



*போலீஸ் துறைக்கு,*

*என் தற்கொலைக்கு யாரும் காரணமில்லை. என்னுடைய பிசினஸில் நட்டம், கடன் தொல்லை, இவைகளைத் தாங்கிக் கொள்ள என்னால் முடியவில்லை. எனவே, விஷம் குடித்து தற்கொலை செய்து கொள்கிறேன்.*

*இப்படிக்கு*

**உதயகுமார்.''**

''எ.. என்னங்க இதெல்லாம்...?''

உதயகுமார் வெடித்துப் போய் அழுதான். ''எனக்கு வேற வழி தெரியலை வித்யா. இந்த இக்கட்டிலிருந்து தப்பிக்கணும்னு... நினைச்சா சாவு ஒண்ணுதான் வழி. ஒரு பக்கம் இன்ஸ்பெக்டர்... இன்னொரு பக்கம் மர்டரர். இந்தப் பிரச்சினை இத்தோடு நிக்கும்ன்னு எனக்குத் தோணலை..''

''அதுக்காக... தற்கொலை பண்ணிக்கிறதா..?''

''என்னால அந்த முடிவுக்குத்தான் வர முடிஞ்சது.. வித்யா, எந்த விநாடி என்ன ஆகுமோன்னு பயந்து சாகறதை விட - நான்கு விஷ மாத்திரையில் செத்துப் போறது உத்தமமான விஷயம் இல்லையா..''

''சரி... நீங்க தற்கொலை பண்ணிக்கிட்டதுக்கு அப்புறம்... என்னோட நிலைமை என்னாகும்ன்னு யோசிச்சுப் பார்த்தீங்களா...? உங்க முடிவு இதுதான்னா... என்னோட முடிவும் இதுதான்... எனக்கும் அந்த விஷ மாத்திரைகளைக் குடுங்க, ஒண்ணாவே செத்துப் போயிடலாம்..''

''நீ எதுக்காக சாகணும் வித்யா...? நான் செத்துட்டா அந்த இன்ஸ்பெக்டரும் - மர்டரும்... உன்னை விட்டு விலகிடுவாங்க..''

''எனக்கு அந்த நம்பிக்கையில்லீங்க...! அவங்களோட கெடுபிடி இன்னமும் அதிகமாகும். நாம ரெண்டு பேருமே செத்துப் போயிடலாம்... எனக்கும் மாத்திரையைக் குடுங்க..''

''வி.. வித்யா...''

''ம்.. குடுங்க... நீங்க வாழறதுக்கு முடிவு எடுத்தாலும் சரி, சாக எடுத்தாலும் சரி, எனக்கும் அதுல பங்கு வேணும்..''

''வித்யா நாம தற்கொலை பண்ணிக்கிறது பெரிய காரியமில்லை... ஆனா தற்கொலை பண்ணிக்கிட்டதுக்கான காரணம் வெளியே தெரியக் கூடாது... நான் என்னோட தற்கொலை லெட்டர்ல என்ன வாசகம் எழுதியிருக்கேன்னு பார்த்தியா...? பிசினஸ் நஷ்டம், கடன் தொல்லை... தாங்காமேதான் இந்த முடிவுக்கு வந்ததா எழுதியிருக்கேன்.. அதே மாதிரி நீயும் ஒரு பேப்பர்ல.. போலீசுக்கு எழுதற மாதிரி ஒரு லெட்டர் எழுதிடு..''

''என்னான்னு எழுதணும்..''

''பிசினஸ் நஷ்டத்தாலும், கடன் தொல்லையாலும் என் கணவர் படற கஷ்டத்தை.. என்னால தாங்கிக்க முடியலை.. நல்ல கணவர் எனக்கு வாய்த்தும் வசதியாக வாழ முடியாத காரணத்தினால் தற்கொலை செய்து கொள்கிறேன்.. என் மரணத்திற்கு யாரும் காரணமில்லை..''

வித்யா ஒரு பேப்பர் துண்டையும் பேனாவையும் எடுத்துக் கொண்டு - உதயகுமார் சொன்ன மாதிரியே கடிதம் எழுதினாள். அவன் வாங்கிப் பார்த்துவிட்டு தன்னோட கடிதத்தையும் சேர்த்து மேஜையின் மேல் வைத்து- பேப்பர் வெயிட்டைக் கிடத்தினான். இன்னொரு டம்ளரில் தண்ணீரை நிரப்பி - தன் சர்ட் பாக்கெட்டில் இருந்த இரண்டு மாத்திரைகளை எடுத்து அதில் போட்டான். மாத்திரைகள் கரைந்ததும் - டம்ளரை எடுத்துக் கொடுத்தான்.

''வா... படுக்கைக்குப் போயிடுவோம்..''



போனார்கள்.

கட்டிலில் எதிரெதிரே உட்கார்ந்து - கண்களில் நீரோடு - ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டே - குடிக்க ஆரம்பித்தார்கள்.

டம்ளர்கள் காலியானதும் - நெருக்கமாய் உட்கார்ந்து தழுவிக் கொண்டு - படுக்கையில் சாய்ந்தார்கள்.

ஒரு நிமிஷம்...

இரண்டாவது நிமிஷம்...

வித்யா நெஞ்சைப் பிடித்துக் கொண்டு - கண்கள் சொருக கால்களை விலுக் விலுக்கென்று உதறினாள்.

உதட்டோரம் எச்சில் நுரை வெள்ளையாய் எட்டிப் பார்த்தது.

''எ..ன்.. ன...ங்...க..''

''ம்...ம்..''

உதயகுமாரை அணைத்துக் கொண்டு - மரண அவஸ்தையில் துடித்தாள் வித்யா.

முழுதாய் ஐந்து நிமிடம்.

வித்யா கண்கள் நிலைத்து செத்துப் போனாள்.

அவளுடைய தலை துவண்டதும்- அவளை அணைத்தபடி படுத்திருந்த - உதயகுமார் மெல்ல எழுந்து உட்கார்ந்தான்.

''குட்பை.. வித்யா...''

எழுந்து மேஜைக்கு வந்து - வித்யா எழுதின தற்கொலைக் கடிதத்தை மட்டும் - மேஜை மேல் வைத்துவிட்டு - தன்னுடைய கடிதத்தை எடுத்து - சின்னச் சின்னத் துணுக்காய் கிழித்து ஃப்ளஷ்

அவுட் லிங்கில் போட்டு - தண்ணீரை பீய்ச்சி அதைக் காணாமல் போகச் செய்தான்.

பின் - அறைக் கதவைச் சாத்திக் கொண்டு - ஹாலுக்கு வந்து டெலிபோனைத் தொட்டு - ரிஸீவரை எடுத்து டயலைச் சுழற்றினான்.

''ஹலோ..''

''யாரு...?'' ஒரு பெண்ணின் குரல் கேட்டது.

''நான் உதயகுமார்..''

''நீங்கதானா? குரல் என்னமோ மாதிரி இருக்கு..''

''பின்னே.. ரெண்டு கண்ணுலேயும் க்ளிசரின் விட்டுக்கிட்டு அழுதா தொண்டை கரகரத்துப் போகாதா..?''

''திட்டம் என்னாச்சு..?''

''சக்சஸ்! உன்னோட ரெண்டு அண்ணன்களையும் கூப்பிடு...''

''போன்ல எதையும் பேச வேண்டாம்... உங்க வீட்டைப் பூட்டிக்கிட்டு இங்கே வாங்க..''

''இப்ப வர்றேன்..''

## 13

உதயகுமார் கங்காநகரின் - இரண்டாவது குறுக்குத் தெருவின் கடைசியில் இருந்த பங்களாவுக்கு முன்னால் காரை நிறுத்திவிட்டு உள்ளே போனான்.

வாசலில் அந்த இரண்டு இளைஞர்களும் - (இன்ஸ்பெக்டராகவும், சப்-இன்ஸ்பெக்டராகவும் வந்தவர்கள்) ஒரு பெண்ணும் (பாத் டப்பில் பிணமாக கிடந்தவள்) ஆவலாய் காத்திருந்து - அவனை எதிர் கொண்டார்கள்.



ஒருவன் கேட்டான்.

''என்ன திட்டம் சக்ஸஸாமே..?''

''பின்னே.. நீ இன்ஸ்பெக்டராகவும் - குமார் சப்-இன்ஸ்பெக்டராகவும்... வனிதா ராணி கொலை செய்யப்பட்ட பெண்ணாகவும் - தத்ரூபமா நடிச்சா... எந்தத் திட்டம் தான் சக்சஸ் ஆகாது..?''

''தற்கொலைக் கடிதம்...?''

''அவ கைப்பட எழுதினது.. மேஜை மேல் பத்திரமா இருக்கு..''

''போலீஸுக்கு எப்பத் தகவல் சொல்லப் போறே..?''

''விடியற்காலை அஞ்சு மணிக்குத்தான்..''

வீட்டுக்குள் போனார்கள். உதயகுமார் ஒரு இளைஞனின் தோளைத் தட்டினான். ''நடேசா! இன்ஸ்பெக்டர் யூனிபார்ம் உனக்கு எவ்வளவு அம்சமா இருந்தது தெரியுமா?''

''நீ சொல்லிட்டே...? நான் அந்த யூனிபார்ம்மை மாட்டிக்கிட்ட போதெல்லாம்... எப்படி நடுங்கிட்டிருந்தேன் தெரியுமா...? வழியில எவனாவது நிஜமான போலீஸ் இன்ஸ்பெக்டர் பார்த்து - விசாரிக்க ஆரம்பிச்சா... என்னாகும்?''

இன்னொரு இளைஞனான குமார் குறுக்கிட்டான். ''உனக்கு அந்தப் பயம். எனக்கு டெலிபோன்ல அவளை மிரட்டும் போதெல்லாம் ஒரே உதறல். நம்ம ஊர் டெலிபோன் பத்தித்தான் தெரியுமே...? எங்கேயாவது க்ராஸ் டாக் ஆகி பிரச்சனை நிஜமான போலீசுக்குப் போயிட்டா வம்பாச்சே..?''

வனிதாராணி சிரித்தாள். ''உங்க ரெண்டு பேரோட பாடு எவ்வளவோ பரவாயில்லை. பாத்டப்புக்குள்ளே - கார் டிக்கிக்குள்ளே பொணமா கிடக்கிறது எவ்வளவு கஷ்டம்

தெரியுமா...? ரெண்டு கண்ணையும் இமைக்காம இருக்க - க்ளிப் மாட்டிகிட்டதாலே - எவ்வளவு கண் எரிச்சல் தெரியுமா...? யோகா ப்ராக்டீஸ் ட்ரெய்னிங் மூச்சை அடக்கிக்கிட்டுக் கிடக்க ரொம்ப உபயோகமா இருந்தது..'

உதயகுமார் சிரித்தான். ''வித்யா ரொம்பவே பயந்துட்டா. நடேசன் இன்ஸ்பெக்டரா வரும் போதும் - குமார் டெலிபோன்ல மர்டரர் மாதிரி பேசும் போதும்- நடுநடுங்கிக்கிட்டா..''

''எப்படியோ... அவளை மரணத்தை நோக்கி கூட்டிக்கிட்டுப் போகிற முயற்சியில் ஜெயிச்சிட்டோம்..''

''நாளைக்குப் போலீஸ் வந்தா.. வித்யா தற்கொலைதான் பண்ணிக்கிட்டாங்கிறதை நம்புவாங்களா?''

''நம்பித்தானே ஆகணும்.. அவ கைப்பட எழுதின லெட்டர் இருக்க... விஷம் குடிச்ச டம்ளர்ல அவ கைரேகைதான் பதிஞ்சிருக்கு.. கடந்த ஆறு மாச காலமாவே... பிஸினஸ்ல என்னோட ஃப்ரண்ட்ஸ்கிட்டயிருந்து வாங்கின கடன்களையும் திருப்பித் தராமே... கஷ்டப்படற மாதிரி எஸ்டாபிளிஷ் பண்ணியிருக்கேன்..''

''போன வருஷம் அந்த வித்யாகிட்டே கொஞ்சம் ஜாக்கிரதையா இருந்திருந்தா... இப்ப அவளை சாகடிக்கிறதுக்கு இவ்வளவு கஷ்டப்பட்டிருக்கணுமா..''

''என்ன செய்யறது ஏமாந்துட்டேன்.''

''நீங்க ஏமாறல... பச்சையா சொன்னா அவ உடம்புக்கு ஆசைப்பட்டீங்க. கொஞ்சம் அதிகமா பழகிட்டீங்க.. அவளோட முரட்டு அண்ணன் உங்களை இடுக்கிப்பிடி போட்டு.. கல்யாணத்தையும் பண்ணி வெச்சுட்டான்... உங்களை அந்தப் பிடியிலிருந்து வெளியே கொண்டு வர - இவ்வளவு கஷ்டப்பட



வேண்டியிருந்திருக்கு..'' வனிதாராணி சொல்லிவிட்டு சிரிக்க - நடேசன் கேட்டான்.

''இனி தங்கச்சியை எப்ப கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க?''

''நான் ஒரு மாசம் துக்க வேஷம் போடணும். ஒரு மாசம் எனக்கும் கல்யாணம் வேண்டாம் வேண்டாம்ன்னு சொல்லணும்... அப்புறம்.. கல்யாணப் பேச்சை ஆரம்பிக்கணும்... இந்த விஷயத்துல நாம அவசரப்பட்டா.. சந்தேகம் கிளம்ப சான்ஸிருக்கு..''

வனிதாராணி சலிப்பாய் சிணுங்கினாள். ''மூணு மாசம் காத்திருக்கணுமாக்கும்?''

''வேற வழி..? இந்த சொர்க்கத்துக்கு அட்ரஸ் மாத்த வேண்டாமா..?''

''சரி.. மச்சான் நீங்க புறப்படுங்க... வித்யாவோட காரியங்களை யெல்லாம் முடிச்சுகிட்டு சாவகாசமா வீட்டுக்கு வாங்க.. ஒரு விருந்து வெச்சு ஜமாய்ச்சுடலாம்... போலீஸ் கிட்டே பேசும் போது ஜாக்ரதையாகப் பேசுங்க..''

உதயகுமார் உற்சாகமாய் விசிலடித்துக் கொண்டே எழுந்தான்.

## 14

மறுநாள் காலை ஆறு மணி.

உதயகுமாரின் வீட்டில் சின்னதாய் ஒரு கும்பல். இன்ஸ்பெக்டர் ஒருவர் தொப்பியை கழற்றிக் கக்கத்தில் வைத்துக் கொண்டு - உதயகுமாரிடம் விசாரித்துக் கொண்டிருந்தார். அவன் கண்களில் கிளிசரின் உபயத்தில் கண்ணீர் நிற்காமல் வழிந்தது.

''எத்தனை மணிக்கு பாடியைப் பார்த்தீங்க..?''

''விடிகாலை அஞ்சு மணிக்கு.. நான் வாக்கிங் கிளம்பற நேரம் அது... காப்பி போட்டுத் தரச் சொல்றதுக்காக.. வித்யாவை எழுப்பினேன்... அவ வாய்ல நுரை தள்ளிக்கிடந்தா... உடம்பு ஜில்லுன்னு இருந்துச்சு. உடனே எங்க ஃபேமிலி டாக்டர்க்குப் போன் பண்ணி வரச் சொன்னேன்... அவர் வந்து பார்த்துவிட்டு இறந்து நாலு மணி நேரமாவது ஆகியிருக்கும்னு சொன்னார். அதுக்கப்புறம் மேஜை மேலே அவ எழுதி வெச்சிருந்த லெட்டரைப் பார்த்தேன்... உங்களுக்கு போன் பண்ணினேன்..''

''உங்களுக்குக் கல்யாணமாகி எவ்வளவு வருஷமாச்சு..?'

''ஒரு வருஷம்..''

''காதல் கல்யாணமா?''

''ஆமா..''

''உங்க ஒய்ஃபுக்கு ஃபாதர் மதர்?''

''அப்பா இல்லை... அவளுக்கு அம்மாவும் அண்ணனும்தான்... சொந்த ஊர் மதுராந்தகம்..''

''அவங்களுக்கு தகவல் கொடுத்துட்டீங்களா?''

''டெலிகிராம் குடுத்திருக்கேன்..''

''அவங்க தற்கொலைக்குக் காரணம் லெட்டர்ல இருக்கிற வாசகம் தானா?''

''பிசினஸ் சரியா நடக்கிறதில்லைங்கிறது வாஸ்தவம்தான். ஆனா.. கடன் தொல்லை அதிகமா கிடையாது. வீட்டையும் காரையும் வித்தா அந்தக் கடன்களை அடைச்சுட முடியும். வித்யாவுக்குக் கடந்த ஒரு மாச காலமாகவே - அவ மனசுக்குள்ளே ஒரு இன்பீரியாரிட்டி காம்ப்ளக்ஸ்..''

''இன்ப்ரியார்டி காம்ப்ளக்ஸா?''



''ஆமா.. நான் உங்களுக்கு மனைவியா வந்த நேரம் சரியில்லை... நான் ராசியில்லாதவள்னு... ஓயாமே சொல்லிட்டிருப்பா... நான் என்ன சமாதானம் பண்ணினாலும் கேக்கமாட்டா... அந்த காம்ப்ளக்ஸ்தான்... அவளைத் தற்கொலை முடிவுக்குக் கொண்டு போயிருக்கு..''

''உங்களுக்குள்ளே.. கோபதாபங்கள்.. சண்டை சச்சரவுகள்... வர்றதுண்டா?''

''நெவர்..! கல்யாணமான இந்த ஒரு வருஷத்துல... எங்களுக்குள்ளே எந்த சண்டையும் வந்ததேயில்லை. ஒருநாளாவது அவ கோபிச்சுக்கிட்டு... அம்மா வீட்டுக்குப் போனதே இல்லை.. இதை நீங்க வித்யாவோட மதர் கிட்டேயும் பிரதர் கிட்டேயும் கேட்டு கன்ஃபர்ம் பண்ணிக்கலாம்..''

வித்யாவின் உடல் வெளியே கொண்டு வரப்பட்டு - மார்ச்சுவரி வேனில் ஏற்றப்பட்டபோது - துக்கம் தாளாமல் மயக்கம் வந்தவனைப் போல் சரிந்து உட்கார்ந்தான் உதயகுமார்.

பக்கத்தில் இருந்தவர்கள் அவனை ஆசுவாசப்படுத்த - சப்இன்ஸ்பெக்டர் ஒருவர் இன்ஸ்பெக்டரிடம் சற்று தள்ளி நின்று பேசிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது.

''டம்ளரை சீஸ் பண்ணீங்களா?''

''பண்ணியிருக்கு ஸார்..''

''ரூம்லயிருந்து வேற என்னென்ன எடுத்திருக்கீங்க?''

''வித்யாவுக்கு வந்த சில லெட்டர்ஸ்... அவளோட டயரி..''

''டயரியைப் புரட்டிப் பார்த்தீங்களா?''

''பார்த்தேன் ஸார்... தன்னோட கணவரைப் பத்தி நல்லவிதமாத்தான் எழுதியிருக்காங்க... ஒரு மனஸ்தாப வார்த்தை கூட கிடையாது..''

''அப்படின்னா.. இது சூஸைடல் தான்..''

''செண்ட் பர்செண்ட் என்னோட மனசுக்கு அப்படித்தான் படுது ஸார்... கேஸ் க்ளியர். சஸ்பெக்ட் பண்ற மாதிரி எதுவும் இல்லை..''

''வித்யாவோட மதரும், பிரதரும் இன்னும் ஸ்பாட்டுக்கு வரலை... அவங்க வந்ததும்... ரெண்டு பேரையும் என்கொயரி பண்ணிடுங்க.. ஏதாவது 'க்ளு' கிடைச்சா ஃபர்தரா இன்வெஸ்டிகேட் பண்ணலாம்..''

''எஸ்..ஸார்..''

## 15

**வி**த்யாவின் காரியங்கள் முடிந்து - ஒரு பதினைந்து நாள் கழித்து - வனிதாராணியின் வீட்டுக்குப் போனான் உதயகுமார். நேரம் ராத்திரி பதினோரு மணி.

நடேசன், குமார், ட்ரிப்ளெக்ஸ் விஸ்கியோடு வரவேற்றார்கள். வனிதாராணி ஓடி வந்து அவனுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

''போலீஸ் இன்ஸ்பெக்டரே உங்களுக்கு ஆறுதல் சொல்ல வேண்டிய அளவுக்கு - தத்ரூபமா அழுது ஆர்ப்பாட்டமே பண்ணீங்களாமே..?''

''பின்னே எதைப் பண்ணினாலும் திருத்தமா பண்ண வேண்டாமா..? இன்ஸ்பெக்டர் எனக்கு ஆறுதல் சொன்னது கூட பெரிய விஷயமில்லை.. மதுராந்தகத்திலிருந்து வந்த வித்யாவோட அண்ணன் என்னைக் கட்டிக்கிட்டு ஆறுதல் சொன்னதுதான் பெரிய விஷயம்... வித்யாவோட தற்கொலையில் அவனுக்கு சந்தேகம் வரும்.. போலீஸ்ல போய் கம்ப்ளைண்ட் பண்ணுவான்னு



நினைச்சேன்.. ஆனா அப்படி எதுவும் நடக்கலை.. வித்யாவுக்கு என்னோட வாழ குடுத்து வைக்கலேன்னு... அண்ணன்காரனும் அம்மாகாரியும் சொல்லிட்டுப் போயிட்டாங்க..'

''அப்படீன்னா லைன் க்ளீயர்..''

''சுத்தம்..''

''மூணு மாசத்துக்கப்புறம் கல்யாணத்தை வெச்சுக்கலாமா?''

''ம்.. சிம்பிளா... ரொம்பவும் முக்கியமானவங்களை மட்டும் கூப்பிட்டு - ஏதாவது ஒரு கோயில்ல வெச்சுக் கல்யாணத்தை முடிச்சுக்கலாம்!''

''நீ.. எப்படி முடிச்சுக்கிட்டாலும் சரி... எங்க தங்கச்சி உன்னோட வீட்ல... உனக்கு உரிமையானவளா... காலடி எடுத்து வைக்கணும்... அதைப் பார்த்து நாங்க சந்தோஷப்படணும். அவ்வளவுதான்..''

''நிச்சயதார்த்தம் இப்பவே நடத்திடலாமா..?'' சொல்லிச் சிரித்த உதயகுமார் - தன் கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றி வனிதாராணியின் விரலில் போட இரண்டு அண்ணன்களும் கைகளைத் தட்டினார்கள்.

## 16

**மூ**ன்று மாதங்கள் வேகமாய் வந்து கரைந்து போக - நல்ல முகூர்த்த நாளில் ரத்தின விநாயகர் கோயிலில் வைத்து - வனிதாராணியின் கழுத்தில் தாலியைக் கட்டி வீட்டிற்குக் கூட்டி வந்தான் உதயகுமார்.

ஹாலில் பெரிதாய் மாட்டப்பட்டிருந்த - வித்யாவின் போட்டோவுக்கு முன்னால் விழுந்து இருவரும் வணங்கினார்கள். உதயகுமார் சுற்றி நின்றிருந்த நபர்களின் காதுகளில் விழும்படியாக - கண்களில் நீர் பனிக்க - குரல் தழுதழுக்க - போட்டோவைப் பார்த்துக் கொண்டு பேசினான்.

''வித்யா! நீ இருந்த இடத்துக்கு - ஒரு பெண்ணைக் கூட்டிகிட்டு வந்திருக்கேன்மா..!எனக்கு இதுல இஷ்டமில்லைன்னாலும்... சொந்த ஜனமும் ப்ரண்ட்ஸும் சொன்னதை என்னால தட்டிக் கழிக்க முடியலை.. என்னோட புது வாழ்க்கைக்கு நீ நிச்சயம் ஆசி குடுப்பேன்னு எனக்குத் தெரியும்..''

அன்று இரவு சாந்தி முகூர்த்த அறையில் வனிதாராணி 'உம்'மென்று முகத்தை தூக்கி வைத்துக் கொண்டாள். உதயகுமார் அவளுடைய மோவாயை தொட்டு மெல்ல நிமிர்த்தினான்.

''அட.. உனக்கு என்னாச்சு?''

''கோபம்..''

''தெரியுது. எதுக்காகக் கோபம்..?''

''நாளைக்குக் காலையிலே எந்திரிச்சதும் முதல் வேலையா..?''

''முதல் வேலையா..?''

''ஹால்ல பெரிசா மாட்டி வெச்சிருக்கிற வித்யாவோட போட்டோவைக் கழற்றி ஸ்டோர் ரூம்ல கொண்டு போய் போட்டுடணும்..'

''ஏன்.. அந்தப் போட்டோ இருந்தா என்ன?''

''எனக்குப் பிடிக்கலை.. அவளைப் பார்த்தாலே எனக்கு எரிச்சல் பத்திட்டு வருது... போட்டோவுக்குப் பெரிசா ரோஜாப்பூ மாலை வேறே..?''



உதயகுமார் சிரித்தான்.

''செத்துப் போனவ மேல ஏன் பொறாமைப்படற...? அவ்வளவு பெரிய வித்யா போட்டோ ஹால்ல இருந்தாத்தான் பார்க்கிற வங்களுக்கு அவ சாவில சந்தேகம் வராது.. என் பேரிலும் ஒரு மதிப்பு இருக்கும்..''

''இனிமேல் அவளால உங்களுக்கு எந்த மதிப்பும் வர வேண்டாம். மொதல்ல போட்டோவைக் கழட்டிடுங்க..''

''சரி! கழட்டிடலாம்... கொஞ்ச நாள் போகட்டும்..''

''நோ...! நாளைக்கே கழட்டியாகணும்..''

உதயகுமார் எரிச்சலாய் அவளைப் பார்த்தான்.

''என்ன... நீ சின்ன விஷயத்துக்கெல்லாம் இவ்வளவு பிடிவாதம் பிடிக்கிறே...? வித்யாவோட போட்டோ ஹால்ல இருக்கிறது... நாம பண்ணின தப்புக்கு.. கவசம் மாதிரி.. எனக்கு மட்டும் அவ மேல பிரியமா என்ன...? எல்லாம் ஒரு செட்டப்தானே..?''

''இருந்தாலும்... எனக்கு இஷ்டமில்லை..''

''சரி நாளைக்கு.. இதைப் பத்தி பேசிக்கலாம்... இந்த ராத்திரியை சண்டை போட்டு வேஸ்ட் பண்ண வேண்டாம்..''

''உங்களுக்கு இதெல்லாம் பழகிப் போன ராத்திரிதானே?''

''வனிதா.. ஏன் என்னமோ மாதிரிப் பேசறே..? உனக்கு என்னாச்சு?''

''எனக்கு ஒண்ணும் ஆகலை. வித்யா மேலே உங்களுக்கு ஆசை தானே..?''

''அதெல்லாம் முந்தி...''

''என் மேல ஆசைப்பட்டுத்தான் கல்யாணம் பண்ணிக் கிட்டீங்களா? இல்லே... என்னோட சொத்துக்காகவா..?''

''ரப்பிஷ்! ஏன் இப்படியெல்லாம் பேசறே வனிதா...? உனக்காகத்தானே... வித்யாவை தற்கொலை பண்ணிக்க வெச்சேன்..''

''சரி.. வித்யாவை விட நான் அழகா இல்லையா?''

''அழகுதான்..''

''நிஜமா...?''

''மத்தவங்க இப்படி சொல்லலையே..?''

''மத்தவங்கன்னா யாரு..?''

''கல்யாணத்துக்கு வந்திருந்தவங்க!''

'என்ன சொன்னாங்க..?'

''வித்யாவை விட எல்லா வகையிலும்.. நான் ஒரு படி கம்மியாம்..''

''சொன்னா சொல்லிட்டுப் போறாங்க..''

''ஐ குட் நாட் டாலரேட்.. ஐ ஹேட் வித்யா... அவ போட்டோ இந்த வீட்ல இருக்கக் கூடாது... அவளைப் பத்தி இனிமே நீங்க என் கூடப் பேசக் கூடாது..''

''அவளைப் பத்தி இனிமே உன்கிட்டே பேசலை போதுமா..?''

''போட்டோ...''

''வாரம் பத்து நாள் போகட்டும்.. கழட்ட ஏற்பாடு பண்றேன்..! நீ வந்த மறுநாளே வித்யாவோட போட்டோவைக் கழட்டினா... பார்க்கிறவங்க உன்னைத்தான் தப்பா நினைப்பாங்க..''

''ஐ டோண்ட் கேர்... யார் வேணுமின்னாலும் எப்படி வேணும்ன்னாலும் நினைச்சுக்கிடட்டும்.. அதைப் பத்தி எனக்குக் கவலையில்லை..''



''நீ இப்படி ஆத்திரப்படறது எனக்கு ஆச்சரியமாயிருக்கு. வனிதா இது ஒண்ணுமில்லாத விஷயம்..''

''உங்களுக்கு வேணுமின்னா அப்படி இருக்கலாம்... எனக்கு இது உருப்படியான விஷயம்...''

''இப்ப நீ பேச்சை நிறுத்தப் போறியா...? இல்லை.. நான் பக்கத்து ரூமுக்குப் போய் படுத்துக்கிடட்டுமா..?''

''அது உங்க இஷ்டம்..''

உதயகுமார் விருட்டென்று எழுந்து - பக்கத்து அறையை நோக்கிப் போனான்.

## 17

**கா**ர் ஹார்ன் சத்தம் கேட்டு - அந்த இரவு நேரத்தில் வெளியே எட்டிப் பார்த்தார்கள் நடேசனும், குமாரும், நேரம் சரியாய் பத்து மணி.

''அட... மச்சான்..''

காம்பௌண்ட் கேட்டுக்கு வெளியே காரில் உட்கார்ந்திருந்த உதயகுமாரை நோக்கி ஓடி வந்தார்கள்.

''என்ன வெளியே நின்னுட்டீங்க... உள்ளே வாங்க..! வனிதாவைக் கூட்டிக்கிட்டு வரலையா?''

''இல்ல.. நான் ஆபீசிலிருந்து இப்பத்தான் வீட்டுக்கு போயிட்டிருக்கேன்..''

''என்னது... இப்பத்தான் ஆபீசிலிருந்து வீட்டுக்குப் போறீங்களா...? புது மாப்பிள்ளை இப்படி இருக்கலாமா?''

"நடேசன்..!"

"என்ன மச்சான்...?"

"எனக்கும் வனிதாவுக்கும் கல்யாணமாகி எவ்வளவு நாளாச்சு?"

"இன்னிக்கு அஞ்சு நாள்.."

"இந்த அஞ்சு நாள்ல வனிதா என்னோட அம்பது தடவை சண்டை போட்டிருப்பா.."

"என்னது சண்டையா..?"

"ஆமாம்..."

"நான் வித்யாவை இன்னும் மறக்கலையாம். அவ போட்டோவை தினசரி பார்த்து ரசிக்கிறதுக்காகத்தான்.. பெரிசா பிரேம் பண்ணி ஹால்ல மாட்டி வெச்சிருக்கேனாம்... வனிதாவை நான் பணத்துக்காக ஆசைப்பட்டுத்தான் கல்யாணம் பண்ணிக் கிட்டேனாம்... அவ பேர்ல எனக்கு உண்மையான ஆசை இல்லையாம்.."

"ஏன் இப்படியெல்லாம் பேசறா..?"

"எனக்கே புரியலை.. ஹால்ல இருக்கிற வித்யாவோட போட்டோவை எடுக்கச் சொல்லி தினமும் ரகளை.."

"மடத்தனம் பண்றாளே.."

"நீங்க ரெண்டு பேரும் நாளைக்கு காலையில் வாக்கிங் போறப்ப வீட்டுக்கு வாங்க. உங்க தங்கச்சிக்கு புத்தி சொல்லிட்டுப் போங்க.."

"கண்டிப்பா வர்றோம்.."

"இதை சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்.." - சொல்லிக் கொண்டே காரைக் கிளப்பினான் உதயகுமார்.

வீடு வந்து சேர்ந்த போது மணி பத்து இருபத்தைந்து.



வாசலிலேயே வனிதா நின்றிருந்தாள். காரினின்றும் இறங்கியவனை சிரிப்பில்லாத முகத்தோடு ஏறிட்டுப் பார்த்து - சற்று தூக்கலான குரலில் கேட்டாள்.

"ஏன் லேட்டு...?"

"ஆபீஸ்ல.. இன்னிக்கு வேலை அதிகமா.. இருந்தது.."

"அவ உயிரோடு இருக்கும் போதும்.. இப்படித்தான் லேட்டா வருவீங்களா..?"

"வித்யா பேச்சை இப்ப எதுக்காக எடுக்கறே..?"

"அவளைப் பத்தி பேசினா உங்களுக்கு ஏன் கோபம் வருது...? நீங்க நிஜமா ஆபீஸிலிருந்துதான் வர்றீங்களா?"

"ஏன்... இப்படிக் கத்தறே...? பக்கத்து வீட்டிலிருந்து எட்டிப் பார்க்கிறாங்க... பார்... எது பேசறதாயிருந்தாலும் வீட்டுக்குள்ளே போய்ப் பேசலாம் வா.."

உதயகுமார் எரிந்து விழுந்து கொண்டே - உள்ளே போனான். வனிதா ராணி பின் தொடர்ந்து வந்தாள்.

"உங்க ஆபீஸ்ல லேடி ஸ்டாஃப் எத்தனை பேர் இருக்காங்க..?"

"எதுக்காகக் கேக்கறே?"

"எனக்கு விவரம் வேணும்..?"

"என்மேல உனக்கு சந்தேகம் அப்படித்தானே?" கேட்டவனின் பார்வை ஹால் சுவர்க்குப் போக திடுக்கிட்டான்.

வித்யா போட்டோ இருந்த இடம் வெறிச்சென்றிருந்தது.

"வனிதா! போட்டோ எங்கே?"

"எடுத்துட்டேன்.."

"யாரைக் கேட்டு எடுத்தே..?"

''யாரைக் கேக்கணும்... எனக்கு அந்தப் போட்டோவைப் பார்க்கும் போதெல்லாம் உடம்பைப் பத்திக்கிட்டு எரியற மாதிரி இருந்துச்சு. இந்த அஞ்சு நாளா நானும் உங்ககிட்ட சொல்லிச் சொல்லிப் பார்த்துட்டேன். நீங்க மசியற மாதிரி இல்லை.. அதான் நானே எடுத்துட்டேன். ஸ்டோர் ரூம்ல கொண்டு போய் போட்டிருக்கேன்.. உங்களுக்கு அவ ஞாபகம் வரும் போதெல்லாம் அங்கே போய்ப் பார்த்துக்குங்க..''

''வனிதா, கல்யாணத்துக்குப் பின்னாடி... நீ ஏன் இப்படி மாறிட்டே...? உன்னை எவ்வளவு ஆசையா கல்யாணம் பண்ணிக்கிட்டேன் தெரியுமா..?''

''எல்லாம் என்கிட்டே இருக்கிற பணத்துக்காக..''

''அறிவுகெட்டத்தனமா பேசாதே..''

''உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிட்டது அறிவுகெட்டத்தனம் தான்..''

''என்னடி சொன்னே..?''

பளீரென்று கையை வீசி - அவளுடைய முகமே நொறுங்கிப் போகும்படியாக அறைந்தான் உதயகுமார். அப்போதும் ஆத்திரம் அடங்காமல் அருகிலிருந்த நாற்காலியை எட்டி உதைத்தான்.

அடி வாங்கி திக்கித்துப் போன வனிதா - கண்களில் நீர் நிறைய உதயகுமாரைப் பார்த்துக் கொண்டு நிற்க - அவன் தன் அறைக்குள் நுழைந்து ட்ரஸ்ஸைக் களைந்து லுங்கிக்கு மாறி - பின்பக்கமிருந்த பாத்ரூமை நோக்கிப் போனான். ''சே வீடே நரகமாயிடுச்சு... உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா.. வாழ்க்கை சொர்க்கமா யிருக்கும்னு நினைச்சேன்.. உனக்கு அந்த வித்யாவே மேல்... ஒரு நாளாவது அவ என்கிட்டே கோபமா பேசினதில்லை.. மூஞ்சியை தூக்கி வெச்சுக்கிட்டதில்லை.. ஆனா நீ...? கல்யாணமாகி அஞ்சு நாள்தான் ஆச்சு.. ஒரேயடியா ஆர்ப்பாட்டம் பண்றே.. செத்துப் போனவளை இன்னமும் ஏன் சக்களத்தியா நினைச்சுட்டிருக்கே...? அவ உனக்கும் எனக்கும் குறுக்கே வந்து படுத்துக்கிறாளா... என்ன..?''



பேசிக் கொண்டே போய்...

பாத்ரூமுக்குள் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்டான் உதயகுமார்.

உடம்பில் இருக்கிற கோப உஷ்ணம் தணிகிற அளவுக்கு ஷவர்க்கு கீழே ஒரு பதினைந்து நிமிஷ நேரம் நின்று குளித்து விட்டு - தலையைத் துவட்டியபடி வெளிப்பட்டபோது- ஹாலின் விளக்கு அணைந்திருந்தது.

வனிதாவின் அறையிலும் இருட்டு.

'கட்டிலில் படுத்துக் கொண்டு அழுகிறாளோ..?'

'சே! அவளை அடித்திருக்கக் கூடாது. செய்த தப்பை மனசில் படுகிற மாதிரி... இதமாய் எடுத்துச் சொல்லியிருக்கலாம்..'

வனிதாவை சமாதானப்படுத்துவதற்காக அவளுடைய அறைக்குள் நுழைந்தான் உதயகுமார்.

இருட்டில் கட்டிலில் - அவள் குப்புறப்படுத்திருப்பது தெரிந்தது.

''வனிதா..''

குரல் கொடுத்துக் கொண்டே -

சுவிட்சைப் போட்டான்.

ட்யூப் லைட் பளீரென்று எரிய -

வனிதா கண்ணுக்குச் சிக்கினாள் - முதுகில் ஆழமாய் புதைந்திருந்த கத்தியோடும்.. படுக்கை பூராவும் பரவியிருந்த ரத்தத்தோடும்...

"வனிதா..ஆ..ஆ..!"

வீறிட்டபடி அவளருகே ஓடினான் உதயகுமார். வனிதா ராணியின் முதுகில் குத்திட்ட கத்தியைப் பறித்து விட்டு - அவளை மல்லாத்தினான்.

## 18

செல்வம் ட்ரய்னேஜ் பைப்பைப் பற்றிக் கொண்டு மளமளவென்று கீழே இறங்கி பங்களாவின் பின் பக்க இருட்டில் ஓடித் தெருவுக்கு வந்தான்.

கையில் ரத்தம் பிசுபிசுத்தது.

மனசுக்குள் - ஓயாமல் வீசிக் கொண்டிருந்த புயல் அந்த நிமிஷம் தணிந்திருந்தது. "கார்டன் டீல்ஸை எவனோ திருடிட்டு போனதுக்காக எனக்குத் திருட்டுப் பட்டம் கட்டி வேலையை விட்டே துரத்தினே.. புருஷனின் திருட்டு புத்தி உனக்கு இருக்குன்னு சொல்லி- உன் ஆபீஸில் வேலைக்கு இருந்த என்னோட மனைவியையும் கேவலமாப் பேசி வேலையை விட்டு நிப்பாட்டிட்டே... என் குடும்பத்தைப் பட்டினி போட்ட நீ சந்தோஷமா இருக்கலாமா...? உதயகுமார்! உன்னைத் தீர்த்துக்கட்டறதுக்காக வீட்டுக்குள்ளே நுழைஞ்சேன். உன் புதுப் பொண்டாட்டி என்னைப் பார்த்துட்டா... சொருகிட்டேன்... இப்போதைக்கு உனக்கு இந்தத் தண்டனை போதும்.."

செல்வம் வாய் விட்டு முனகிக் கொண்டே வேக வேகமாய் நடந்தான்.

'முதலில் கையில் ஒட்டியிருக்கும் இந்த ரத்தக்கறை பிசுக்கை கழுவ வேண்டும்.'



சுற்றும் முற்றும் பார்த்தான்.

ரோட்டின் எதிர் சாரியில் - தண்ணீர் குழாய் தெரிந்தது.

ரோட்டைக் கடந்து ஓடினான்.

ஓட..ஓடவே...

வளைவிலிருந்து அந்த லாரி வேகமாய் எதிர்ப்பட -

செல்வம் திகைத்துப் பின்வாங்குவதற்குள் -

லாரியின் மொத்த கனமும் அவன் மேல் மோதி-உருட்டி ரத்தக் கூழ் மாதிரி நசுக்கிவிட்டு - ட்ராபிக் இல்லாத - அந்த ரத்த சாலையில் நிற்காமல் பறந்தது.

## 19

அவசர போலீஸ் பிரிவில் டெலிபோன் துடித்தது. இன்ஸ்பெக்டர் ஒருவர் ரிஸீவரை எடுத்தார்.

"ஹலோ."

"அவசர போலீஸ்..?"

"எஸ்.."

'ஸார்.. நான் இங்கே.. கோகுலம் நகர் தேர்ட் கிராஸிலிருந்து ஆடிட்டர் ஜெயராமன் பேசறேன். எனக்குப் பக்கத்து வீட்ல.. உதயகுமார்ன்னு ஒருத்தர்... அவர் தன்னோட மனைவியைக் கத்தியால குத்திக் கொலை பண்ணிட்டார்.. கடந்த அஞ்சு நாளாவே அவங்க ரெண்டு பேர்க்குள்ளே சண்டையும் சச்சரவுமா இருந்தது. கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி வெடிச்சுடுச்சு... மனைவியைக்

கத்தியால குத்திட்டு அவர் பிரமை பிடிச்ச மாதிரி நின்னுட்டிருக்கார்... உடனே வர்றீங்களா ஸார்..?''

''இதோ புறப்பட்டுட்டோம்..''

போலீஸ் ஜீப் - உதயகுமார் வீட்டைத் தொட்டபோது- அவன் வீட்டு வாசலில் தெரு ஜனம் நின்று உள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. கைகளிலும், மார்பிலும் ரத்தக் கறைகளோடு - ஒரு நாற்காலியோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தான் உதயகுமார்.

'வனிதாவை நான் கொலை செய்யலை.. நான் கொலை செய்யலை' வாய் ஓயாமல் அரற்றிக் கொண்டிருக்க - ஜீப்பினின்றும் இறங்கிய இன்ஸ்பெக்டரை அந்த மனிதர் எதிர் கொண்டார். ''நான் தான் ஆடிட்டர் ஜெயராமன்... சத்தம் கேட்டு நான் வீட்டுக்குள்ளே வந்தப்ப.. உதயகுமார் கத்தியும் ரத்தக் கையுமா நின்னுட்டிருந்தார். அவராலே மத்தவங்களுக்கு ஆபத்து வரலாம்னு நினைச்சுத்தான் நாற்காலியோடு சேர்த்துக் கட்டிப் போட்டேன்..''

உதயகுமார் கத்தினான்.

''இன்ஸ்பெக்டர்! நான் கொலை செய்யலை..''

அவன் கத்தலைப் பொருட்படுத்தாத இன்ஸ்பெக்டர் - கான்ஸ்டபிள்களுக்கு கண்ணைக் காட்ட அவர்கள் கைவிலங்கோடு அவனை நெருங்கி - கயிற்றை விடுவித்து விலங்கை மாட்டி னார்கள்.

ஆடிட்டர் ஜெயராமன் சொல்லிக் கொண்டிருந்தார். ''ஹி ஈஸ் த மர்டரர் இன்ஸ்பெக்டர்.. முதல் மனைவி தற்கொலை பண்ணிகிட்ட நாளிலிருந்து உதயகுமார் ரொம்பவும் அப்செட்டான நிலைமையில் இருந்தார். தனக்கு ரெண்டாவது கல்யாணமே வேண்டாம்னு சொன்னார். ஆனா ஃப்ரண்ட்ஸும் சொந்த ஜனமும் கேக்கலை. கட்டாயப்படுத்தி அவர்க்கு கல்யாணத்தைப் பண்ணி வெச்சுட்டாங்க... கல்யாணமான நாளிலிருந்தே ரெண்டு பேர்க்கும்



சண்டை... இன்னிக்கு ஆத்திரம் தாளாமே... கத்தியை எடுத்துக் குத்திட்டார்..''

''கோர்ட்ல வந்து இதே மாதிரி சாட்சி சொல்வீங்களா..?''

''எனக்கென்ன ஸார் பயம்...? தாராளமா வந்து சாட்சி சொல்றேன்... கண்ணால பார்த்ததைத்தானே சொல்லப் போறேன்... என்னை ஐ விட்னஸாவே போடுங்க..''

கேட்டுக் கொண்டிருந்த உதயகுமார் இடிந்து போனான்.

## 20

ஏறக்குறைய ஒன்பது மாத விசாரணைக்குப் பின்...

செஷன்ஸ் கோர்ட்டில் - ஜட்ஜ் அந்தத் தீர்ப்பை மெல்லிய குரலில் வாசித்துக் கொண்டிருந்தார்.

''உதயகுமார் தன் முதல் மனைவி வித்யாவின் மேல் அதிக அளவு அன்பு கொண்டிருந்தார் என்பது விசாரணையில் தெரிய வருகிறது. வித்யாவின் போட்டோவை ஹாலில் இருந்து வனிதா அப்புறப்படுத்தியது அவர்க்கு - மிகுந்த கோபத்தையும் ஆத்திரத்தையும் விளைவித்திருக்கிறது. அந்த ஆத்திரத்தின் காரணமாகவே - அவளைக் கொலை செய்திருக்கிறார். கத்தியில் படிந்திருந்த கைரேகைப் பதிவுகளும் - சாட்சி ஆடிட்டர் ஜெயராமனின் கண் கூடான சாட்சியும் - உதயகுமார் குற்றவாளி என்பதைத் துல்லியமாய்த் தெரிவிக்கின்றன. எனவே கொலைக் குற்றம் சாட்டப்பட்ட உதயகுமார்தான் இந்தக் கொலையைச் செய்திருக்க வேண்டும் என்கிற தீர்மானமான முடிவுக்கு இந்தக் கோர்ட் வருகிறது.''

''திருமணமான ஐந்தாவது நாளிலேயே - ஒரு இளம் பெண்ணை சாதாரண செயலுக்காக - குத்திக் கொன்ற உதயகுமார்க்கு இந்தக் கோர்ட் செக்ஷன் 302ன் படி மரண தண்டனை விதிக்கிறது. கொலையாளி சாகும் வரையில் தூக்கிலிடப்பட வேண்டும் என்பதை இந்தக் கோர்ட் தண்டனையாக அளிக்கிறது.''

காதுகளில் தீர்ப்பின் வாசகங்கள் விழுந்து கொண்டிருக்க - குற்றவாளிக் கூண்டில் நின்றிருந்த உதயகுமாரின் பார்வை - அந்த செஷன்ஸ் கோர்ட் சேம்பரையும் - வராந்தாவையும் - ரோட்டையும் தாண்டி - பின்னணியில் தெரிந்த மேகமில்லாத வானப்பரப்பில் நிலைத்து நின்றது.

அதில் வித்யாவின் முகம் தெரிவது போன்ற பிரமை. கெக்கலிட்டு சிரிப்பது போன்ற பிரமை. 'வாங்க!' என்று கூப்பிடுவது போல் பிரமை.

தீர்ப்பைப் படித்துவிட்டு ஜட்ஜ் எழுந்து கொண்டிருக்க - கோர்ட் நிசப்தமின்றி கலைய ஆரம்பித்தது.